குணா கல்வி நிலையம்
இல 213, நீதிமன்ற வீதி, திருக்கோணமலை
17வது அகவையில் காலடி எடுத்து வைத்துள்ள எமது கல்வி நிலையத்தின் 2013ம் ஆண்டுக்கான தரம் 1 - க.பொ.த(சா/த) வரையிலான புதிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன
ஆரம்பம் 02.01.2013 (புதன்கிழமை)
T.P - 0777034908

மார்கழி மாதம் 15ம் திகதி

December 30, 2012

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 23

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

விலை — 20.00 பக்கங்கள் — 10 பிரதி ஞாயிறு தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் வார இதழ்

# வெளிநாட்டு மோகத்தில் மேலும் பல லட்சங்களை இழந்தனர் மக்கள்

# 80 லட்சங்கள் ? வரை சுருட்டிக் கொண்டு சந்தேக நபர் தலைமறைவானார் !!!

### இந்தியக் கடற்படைக் கப்பல் திருமலையில்...!

இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான கார்-நிக்கோபார் கடற்படைக் கப்பல் திருமலைத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுச் சென்றுள்ளதாக இலங்கைக் கடற்படை அறிவித்துள்ளது. (7ம் பக்கம் பார்க்க)



### தமது முதலாவது சம்பளத்தைப் பெற்றுக்கொண்டனர் தமிழ் இராணுவப் பெண்கள்


கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பகுதிகளிலிருந்து இராணுவத்திற்குள் கடந்த மாதம் ஈர்க்கப்பட்ட சுமார் 103 தமிழ்ப் பெண் இராணுவத்தினர் தமது முதலாவது மாதச் சம்பளத்தினை பெற்றுக் கொண்டுள்ளனர் என தமிழ் கார்டியன் இணையத்தளச் செய்தி தெரிவிக்கின்றது. (7ம் பக்கம் பார்க்க)



## காணமற்போனவர் சடலமாய் மீட்பு

கடந்த 18.12.2012 அன்று தம்பலகமத்தில் மாடு மேய்ப்பதற்கு சென்று காணாமல் போன கோணாமலை மகாதேவனின் சடலம் 24.12.2012 அன்று மகாவலி கங்கையில் மீனவர் ஒருவரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 18.12.2012 அன்று கடும் மழை பெய்யத் தொடங்கியதிலிருந்து கங்கையின் இடது கரையில் நீர்ப் பெருக்கு ஏற்படத் தொடங்கியுள்ளது. இதனால் மாடுகளை வலது கரைக்கு ஓட்டிச் சென்று பாதுகாப்பாக விட்டு வர நண்பர்களுடன் வலது கரை நோக்கிப் போயிருந்த மகாதேவன் ஊருக்குத் திரும்பவில்லை. அதனைத் தொடர்ந்து அவரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்த போதும் கடும் மழையால் அத் தேடுதற் பணி முற்றுப் பெறவில்லை. அவ்வாறிருக்க அவரது சடலம் முதலைகளால் உருக் குலைக்கப்பட்ட நிலையில் கங்கையின் (7ம் பக்கம் பார்க்க)



## அரச வேலை வாய்ப்பைப் பெற்றுத் தருவதாகவும் உறுதியளிப்பு!!!

(7ம் பக்கம் பார்க்க)

## இன்று அரங்காடல்

திருக்கோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் இன்று மாலை 4 மணிக்கு அரங்காடலின் வெளி - 07 திறக்கின்றது என அதன் அமைப்பாளர் தெரிவித்தார்.

பார்வையாளர்களுக்கும் நிகழ்த்திக் காட்டுபவர்களுக்கும் எனத் திறந்து கிடக்கும் இவ்வரங்கு இரு மாதத்திற்கு ஒரு முறை நிகழ்கின்றது.

இன்றைய அரங்கில் எண்ணிம நூலகம்.org யின் அறிமுகம், நடன ஆசிரியர் கோ. சரீஸ்குமார் அவர்களின் கலாலய மாணவிகளின் இரு நடனங்கள், வேல் முன்பள்ளிச் சிறார்களின் முக்கலாச்சார நடனம், நவசஞ்சிதாவின் வாய்ப்பாட்டு, பிரசனின் கவிதை என்பவற்றுடன் பவித்ரனின் - எனது பார்வையில் கவிதை-, திருமலை மாவட்டக் கலைஞர் கையேடு - லியோ சுதன், - நிலைதிருத்தலில் சிறுகதைகள் வேண்டிநிற்கும் மாற்றம்- மாயன் ஆகியோரும் உரையாற்றவுள்ளனர்

### சுனாமிப் பேரலையின் எட்டாம் ஆண்டு நிறைவு தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் நினைவு கூறப்பட்டது.

சுனாமிப் பேரலையால் பலி கொள்ளப்பட்ட தமது பாடசாலை மாணவியான செல்வி. குணசேகரன் வைஸ்ணவி அவர்களை நினைவு கூர்வதுடன் ஏனைய சுனாமியால் பலியான அனைவரையும் நினைவுறும் 8ம் ஆண்டு நிகழ்வுகள் கடந்த 26.12.2012ல் திருக்கோணமலை மெதடிஸ் பெண்கள் கல்லூரியில் நிகழ்ந்தது. பாடசாலை அதிபர் திருமதி உ. ஜோதிநாதன் தலைமையில்



### திருக்கடலூர் வீதி விபத்தில் படுகாயமடைந்த சிறுவன்

துவிச்சக்கர வண்டியில் பயணித்த சிறுவனை அதிவேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதி வீசித்தள்ளிய சம்பவமொன்றை திருக்கடலூர் கடல் முக வீதிச் சந்தியில் எமது நிருபர் பதிவு செய்துள்ளார்.

இச் சம்பவம் 26.12.2012ன் நண்பகல் வேளையில் நிகழ்ந்துள்ளது. சதீஸ் என்ற சிறுவனே கடையில் மிளகாயத் தூளும் உப்பும் வாங்கிக் கொண்டு வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த போது அதிவேகமாக வந்த (7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு

159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம் !

**கலைஞர்களைக் கலைஞர்களே தானா ஊக்குவிக்க வேண்டும் ?**

கடந்த 27.12.2012ல் நீங்களும் எழுதலாம் வாகசர் வட்டத்தின் ஏற்பாட்டில் நடந்த கலைஞர் ஊக்குவிப்பு நிகழ்வொன்றில் கலந்து கொள்ளக் கிடைத்தது.

அப்போது நிகழ்ந்த பேச்சொன்றில் கலைஞர்களைக் கலைஞர்களே ஊக்குவித்துப் பாராட்ட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. அக்கருத்து தற்போதைய காலகட்டத்திற்கு மிகச் சரியாகப் பொருந்தியது. கலைகள் தொடர்பாகவும் கலைஞர்கள் தொடர்பாகவும் சமூகம் சார்ந்து எழுந்துள்ள உண்மை நிலை அதுதான். கலைஞர்களைச் சமூகம் கைவிடத் தொடங்கியுள்ள இந் நிலையில் கலைஞர்கள் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதைச் சற்றேனும் சிந்திக்க வேண்டிய நிலையும் எம்முன்னுள்ளது.

சாதாரணமாக ஒரு உதாரணத்தைப் பார்ப்போமானால் ஒரு இனத்தின் வரலாற்றை தமது எழுத்துக்களிற் பதிந்து தலைமுறை தமைுறையாக அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் அளப்பறிய சேவை செய்பவன் யாரெனில் அங்கெஞ்சிநிற்கும் விடை கலைஞன் என்பதே.

ஒரு இனத்தின் சுய நிர்ணய உரிமையில் கலையும் அதைப் புனையும் கலைஞனின் பங்கும் காத்திரமானது என்பதுடன் அவ்வினத்தின் சுயநிர்ணய உரிமைக்கான மூலாதாரங்களில் ஒன்றாகவும் அமைகின்றது. எனில் ஈழத்துக் கலைஞர்களின் முக்கியத்துவம் ஏன் அவர்கள் சார்ந்த சமூகத்தில் குறைந்தளவிற் பார்க்கப்படுகின்றது? என்பதற்கான உண்மை விடை அவர்களை விளம்பரப் படுத்தும் சரியான ஊடகத் தொடர்பு அவர்களிற்கு இல்லாமல் போயிருப்பதே! ஏன் அவர்களை விளம்பரப்படுத்த வேண்டும் என்ற கேள்விக்கான பதில் எமது தமிழ் சமூகத்தைப் பீடித்துள்ள தொலைக்காட்சிப் பிசாசின் கரங்களின் ஊடாகச் சென்றே அதே வழியிலேயே எம்மை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே தந்திரோபாய நகர்வாக அமையும்.

அடுத்து அவ் விளம்பரப்படுத்தலின் அடுத்த நகர்வைப் பாடசாலைகளில் செய்ய வேணடிய தேவை கல்விச் சமூகத்திற்கு உள்ளது. அதற்கும் முன் கல்விச் சமூகத்தின் ஆணி வேரான ஆசிரியக் குழாம் எந்தளவிற்கு கலைஞர்களையும் கலைகளையும் சரியான கண்ணோட்டத்தில் புரிந்துகொண்டுள்ளது என்பது கேள்விக்குறியாகும். ஏனெனில் கிழக்கு மாகாண இலக்கிய விழாவின் ஆய்வரங்கில் வருகை தந்திருந்த ஆசிரியர்களின் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணிவிடலாம். எத்தனை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அந்த ஆய்வரங்கிற்கு சமூகமளித்திருந்தனர். கல்வி அமைச்சின் இலக்கிய விழாவிற்கே கல்விச் சமூகம் கொடுக்கும் முக்கியத்தைக் கண்டு கொண்டுள்ளோமல்லவா?

நிலத்தைப் பிடிப்பதற்கான போர் தோற்றபின் தான் எமது இருப்புக்களை பறைசாற்றும் கலைகளும் கலைஞர்களும் தமது மொழியிற் போராட வேண்டிய காலம் உருவாகிக் கிடக்கின்றது என்ற காலத்தின் தேவையை நாம் உணர்வோமா?

-ஆசிரியர்-

## புதிய சோனகத் தெருவில் டெங்கு ஒழிப்பு

கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த பொதுச் சுகாதார அதிகாரிகளுடன் திருமலையின் பொதுச் சுகாதார அதிகாரிகளும் இணைந்து நகரப் பிரதேசத்தின் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

அதன் முதற் கட்டமாக 26.12.2012ல் நகரின் புதிய சோனகத் தெருவில் வீடுவீடாகச் சென்று பரீட்சிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அதன் போது பல வீடுகளின் உரிமையாளர்கள் டெங்கு தொடர்பான விழிப்புணர்வுக்கு உட்படுத்தப் பட்டதுடன் டெங்கு நுளம்பு பரவக்கூடியவாறு சுற்றுப்புறச் சூழலைப் பேணிய சில வீட்டு உரிமையாளர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து மாலை வேளையில் டெங்கு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புகைமருந்தும் தெளிக்கப்பட்டது.

அப் பிரதேசத்தில் டெங்கு நோய்க்கு இலக்காகி குழந்தையொன்று வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டதைத் தொடர்ந்தே இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகின்றது.

(நூ)





## சிவப்பு மழையில் உயிரியல் துகள்கள்

எமது நாட்டில் அண்மைக்காலமாக பெய்த சிவப்பு மழையில் உயிரியல் துகல்கள் உள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

செவனகல பிரதேசத்தில் பெய்த சிவப்பு மழையின் மாதிரிகளை வைத்து பிரித்தானிய பக்கிங்கம் பல்கலைக கழகம் மேற்கொண்ட ஆய்வின்போதே இவ்வுண்மை உறுதிசெய்யப்பட்டுள்ளது. இச்சிவப்பு மழை தொடர்பான ஆய்வுகள் மேலும தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## ஆலங்கேணியில் நிவாரண விநியோகம்

கடந்த புதன்கிழமை ஆலங்கேணி யில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உள்ளூர் பிரமுகர் களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியில் நிவாரணப் பொருட்களை கிழக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சித் தலைவர் திரு. சி.தண்டாயுதபாணி வழங்கிவைத்தார்.

இந் நிவாரண பொதியில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 750 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. வெள்ளத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட 85 ஆலங்கேணிக் குடும்பங்களுக்கு இந் நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டது குறிப்பிடத் தக்கது.



## இனிப்புடன் பிறந்தார் இயேசு பாலன் லியோ கழகம் கொண்டாட்டம்

கடந்த யேசு பாலன் பிறந்த தினத்தினை திருமலை நகர இளம் சிங்க கழகத்தினர் (லியோ ) புனித பெரிய கடை மாதா கோவிலில் மிகக் கோலாகலமாக கொண்டாடினர். இக் கொண்டாட்டத்தின் போது அக் கழக இளையோரால் தயாரிக்கப்பட்ட பூந்தி லட்டு அனைவருக்கும் பரிமாறப்பட்டது. இனிய நாளின் இரவுப் பொழுதில் இனிப்பு லட்டுக் கிடைத்தது மிகப் பொருத்தமாகவும், சந்தோசமாகவும் இருந்ததாக வந்திருந்தவர்கள் தெரிவித்திருந்தனர்.

நிகழ்வின் போது மலைமுரசின் ஒளிப்படக் கருவியின் கண்களுக்கு சிக்கியது.







## ஆண்டிறுதி ஒன்றுகூடல்

தேசிய கட்டிட நிர்மாணிகள் சங்கத்தின் திருக்கோணமலைக் கிளையின் ஆண்டிறுதி ஒன்றுகூடல் இன்று மாலை 6.30 மணிக்கு வெல்கோம் கொட்டலில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாணப் பிரதம செயலாளர் கலந்து கொள்ளவுள்ளார். அத்துடன் திருகோணமலை நகரப் பிரதேசச் செயலாளர், உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் மாவட்டத்திலுள்ள பொறியியலாளர்கள் தொழில் நுட்ப அலுவலர்கள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து முடித்துள்ளதாக அச் சங்கம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ள நிவாரணப் பணியில் முதலமைச்சர்.

திருக்கோணமலை மாவட்டத்தின் பல பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுள்ள நிலையில் அப் பகுதிகளுக்கான நிவாரண உதவிகளை அரச மற்றும் தனியார் நிதியுதவிகள் ஊடாக வழங்கப்பட்டு வருகின்றமையைக் காணக் கூடியதாக உள்ளது.

அதன் ஒரு கட்டமாக கிண்ணியா பிரதேசத்தில் வெள்ள அழிவைச் சந்தித்த மக்களுக்கு காசோலைகளை வழங்கி வைத்துள்ளர் கிழக்கின் முதலமைச்சர் அவர்கள்.

அத்துடன் மூதூர் கிளிவெட்டி தற்காலிகத் தங்குதிட மக்களுக்கு உலர் உணவுப் பொருட்களும் முதலமைச்சரால் வழங்கப்பட்டுள்ளன.



## கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களில் சீனக்குடா வான்படையினர்

சீனக்குடா வான் படையினர் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை தன்னார்வப் பணிகளை முன்னெடுத்ததன் ஊடாகக் கொண்டாடியிருந்தனர்.

சிரமதானம், வருணப் பூச்சு மற்றும் பின்னிரவு தேவாலய பிரார்தனை களுக்கான மக்கள் போக்குவரத்து வசதிகளை அவர்கள் மேற்கொண்டிருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன் இரவு பிரார்த்தனைகளுக்கு சீனன் குடாத் தேவாலயத்திற்கு வந்திருந்த மக்களுக்கு அவர்கள் பால் கலந்த கோப்பிப் பாணத்தையும் வழங்கியிருந்தனர்.



## மக்கள் மீட்புப் பணியில் கடற்படையினர்

திருக்கோணமலை மாவட்டத்தின் திம்பிரயாயப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு முகாம்களுக்கு கொண்டுவரும் நடவடிக்கைகளை கடற்படையினர் மேற்கொண்டிருந்தனர்.

4ஆர் அணி என அழைக்கப்படும் வேகமீட்பு நடவடிக்கைக் கடற்படை அணியே இம் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது.

இவ்வகை அணிகள் மட்டக்களப்பு திருகோணமலை மற்றும் கிரான் பிரதேசங்களில் மீட்பில் ஈடுபட்டதாகவும் எந் நேரத்திலும் மீட்பில் ஈடுபடத் தயாராயிருப்பதாகவும் கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



## பப்புவா நியூகினித் தீவில் தமிழ்க் குடியேற்றவாசிகள் தாக்கப்பட்டுள்ளனர்

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்குள் நுழைந்து தற்போது பப்புவா நியூகினித் தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மக்களிடையே ஏற்பட்ட கலவரத்தின் போது ஏழு இலங்கைத் தமிழர்கள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. பப்புவா நியூகினியின் அகதி முகாமொன்றில் இவ் வன்முறை நிகழ்ந்துள்ளது.

அங்கு பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சட்ட விரோதக் குடியேற்ற வாசிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறு தடுத்துவைக்கப் பட்டுள்ள ஈரானியர்களுக்கும் இலங்கையர் களுக்கும் இடையே கடந்த சில காலமாக முரண்பாடுகள் உருவாகியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

இம் முரண்பாடு கைகலப் பானதைத் தொடர்ந்தே தமிழர்கள் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்தறிவித்த அவுஸ்திரேலியக் குடிவரவு அமைச்சகப் பேச்சாளர் கிரிஸ்போவன் முகாமின் இணையத்தள அறையொன்றிலேயே இக் கைகலப்பு நிகழ்ந்துள்ளதாகவும் சிறு காயங்களுக்கு உள்ளான எழுவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் காவல்துறையினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

திருமலையினர் எவராவது காயமடைந்துள்ளனரா என்பது தெளிவாகவில்லை

## வரலாற்று உருவாக்கக் கால திருகோணமலை.




**திரியாயில் ஒரு வரலாற்று பதிவு**

வரலாற்று காலத்தில் வியாபார அடிப்படையில் மட்டுமே தனது நாகரீகத்தையும் வழிபாட்டு வழிமுறைகளையும் வளர்த்துக்கொண்ட திருகோணமலையின் முன்னை நாள் பதிவுகளை நாம் தேடிக் கொண்டு இருக்கும் வேளையில் திருகோணமலை மாவட்டத்தில் கிட்டத்தட்ட முல்லைத் தீவு மாவட்டத்திற்கு அருகில் அமைந்துள்ள ஒரு விவாசாய கிராமமான திரியாயில் மிக முக்கியமான வரலாற்று பதிவை எல்லைக்கல் இவ்வாரம் தேடுகிறது



திருகோணமலை நகரில் இருந்து இருந்து கிட்டத்தட்ட 43 கிலோமீட்டர் தொலைவில் திரியாய் என்னும் தமிழ் விவசாய கிராமத்தில் ஒரு சிறிய குன்றில் தமிழ் வியாபாரிகள் தொடர்பான குறிப்புக்கள் இருப்பதாக கேள்விப்பட்டு காணச்சென்ற போது எங்களை வரவேற்றது கடற்படை காவலரண் தான். அக் காவல்களை தாண்டி சென்ற போது அங்கு ஒரு சிறிய குன்றும் அதனைச்சுற்றி பண்டைய கால அகழியும் காணப்பட்டது.


அடுத்து குன்றில் ஏறுவதற்கான படிகட்டுகள் அமைக்கப்பட்டுள்ளது.

இப் படிக்கட்டுகள் பண்டைய காலத்துக்குரியதாக இருந்தாலும் சிறிய அளவில் புனரமைக்கப்பட்டுஇருந்தது .சிறிய தூரம் படிக்கட்டுகளில் ஏறிச் சென்றவுடன் எதோ சிங்களத்தில் எழுதி அம்புக்குறி இடப்பட்டு இருந்தது..அங்கு சென்ற போது ஒரு சிறிய ஒற்றை அடிப்பாதை சிறு பற்றை காட்டுப்பகுதிக்கு சென்றது அங்கு சென்று பார்த்தால் அங்கு ஒரு அறிவித்தல் பலகை வைக்கப்பட்டு இருந்தது அது இதுதான்

அறிவித்தல் பலகையைக்கு சற்று அருகாமையில் அக் கல்வெட்டுகளை காண முடிந்தது. இந்த கல்வெட்டுக்குரிய விளக்கமாய் தபஷ்சு பல்லுக்க ஆகிய இரு கடல் வியாபாரிகளால் கிரிகண்ட என[illegible] எனவும் வி[illegible] மனிதர்களும் வணங்கும் இக் கோபுரத்தை இக் கல்வெட்டை செய்வித்த வியாபாரிகளும் வணங்கியதன் புண்ணியத்தின் பலனாக இல்லற வாழ்வில் இருந்து நீங்க வேண்டும் என்று பிராத்தனை செய்ததாக அப் பலகையில் போடப்பட்டு இருந்தது. அது மட்டும் அல்லாது இக் கல்வெட்டுக்குரிய சில தகவல்களும் அப் பலகையில் மேலும் காணப்பட்டதாவது இது எழாம் எட்டாம் நூற்றாண்டிற்கு உரியது எனவும் எழுத்து பல்லவர்களுடையது எனவும் மொழி சமஸ்கிருதம் எனவும் காணப்பட்டது :

இவ்வாறு அப் பலகையில் காணப்பட்ட விளக்கத்தையும் காலத்தையும் மொழியையும் அடிப்படையாக கொண்டு பார்க்கும் போது நமக்கு ஒன்றுக் கொன்று முரனான [illegible] கான [illegible]

இன்னும் நடுவோம்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையறு நிலையில் இந்திய வெளியுறவுக் கொள்கை

வெறும் 300 சதுர கிலோ மீற்றர் பரப்புடைய மாலைதீவு ... கடல்மட்டத்திலிருந்து சுமார் ஆறு அடி உயரம் கொண்ட, கடலினால் தீவுகள் மூழ்கும் ஆபத்துக் கொண்ட, அரசியல் தளம்பல்களைத் தற்போது கடுமையாக எதிர்கொண்டு சனாதிபதி நஷீர் முஹமட் பதவி விலக முகமட் வாஹிட் புதிய சனாதிபதியான பின் அவரின் பேச்சாளர் அந்நாட்டிற்கான இந்தியத் தூதரை மாலைதீவின் எதிரி என்றும் துரோகி என்றும் வர்ணித்திருக்கின்றார்.

அதனைத் தொடர்ந்து மாலைதீவு அரசு தனது தலைநகர் மாலேயிலுள்ள விமான நிலைய அபிவிருத்தி நடவடிக்கைக்காக அடுத்துவரும் 25 வருடங்களுக்கு இந்திய நிறுவனமான G.M.R நிறுவனத்துடன் 2010ல் செய்து கொண்ட ஒப்பந்தத்தை இரத்துச் செய்துள்ளது.

மாலைதீவு இவ்வளவு உறுதியாக இந்தியாவைக் கேவலப்படுத்த முடிகின்ற நிலையில் வெளித்தெரிகின்ற பல்வேறு உதாரணங்களுள் இவ்வுதாரணத்தை இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையின் கையறு நிலையைத் தெளிவாக வெளிக்காட்டும் உதாரணமாக நாமெல்லோரும் புரிந்துகொள்ள முடியும்.

ஆசிய வல்லாதிக்கப் போட்டியில் இந்திய இராசதந்திர செல்வாக்கின் சரிவானது ஆசியாவின் தனித்த வல்லரசாகும் வலுவைச் சீனாவிற்கு தாரை வார்த்து விடும் போலுள்ளது.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக் கோட்பாடுகள் என்ன? என்பதைக் கடந்த வாரமளவில் கொழும்பிலுள்ள "லக்ஸ்மன் கதிர்காமர் வெளியுறவுக் கொள்கை" நிலையத்திற்கு வருகை தந்து தனது உரையை நிகழ்த்திய இந்திய பாதுகாப்புக் கல்வி மற்றும் ஆய்வு நிலையப் பணிப்பாளர் நாயகம் (Director General, Institute for Defence studies and Analysis, New Delki) கலாநிதி அரவிந் குப்தா அவர்கள் பின்வருமாறு விபரித்திருந்தார்.

''போட்டியை விடக் கூட்டுறவு'' (Cooporation rather than competition) முரண்பாட்டை விட ஒற்றுமை (Engagemeement rather than confrontation) ஆகிவற்றின் ஊடே அயல்நாடுகளின் வெற்றியூடாக இந்திய நாட்டின் வெற்றி என்பதே இந்திய வெளியுறவுக் கொள்கையின் கோட்பாடுகள் என விளம்பியுள்ளார்.


இக்கொள்கை விளக்கத்தை அவர் வழங்கிய நாட்களுக்கு சரியாக சில நாட்களுக்கு முன் இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் D.Kஜோசி தமது கடற்படை இந்திய நலன்களைப் பாதுகாக்க தென் சீனக்கடலுக்குள் புகத் தயாராக இருப்பதாக தெரிவித்திருந்தார்.

"முரண்பாட்டைவிட ஒற்றுமை" எனும் இந்திய வெளியுறவு நிலைப்பாடு இங்கு கேள்விக்குறியாகின்றது. பாதுகாப்பு என்று வரும் போது முரண்படத் தயாராகும் இந்திய வெளியுறவுக் கொள்கையின் போக்கு (External affairs style) இந்தியாவின் அயல்நாடுகளை சுலபமாக சீன வலைக்குள் வீழ்த்தும் நடவடிக்கையாகவே உள்ளது.

உதாரணமாக மாலைதீவின் அறிவிப்பை தொடர்ந்து இந்தியா ஏட்டிக்குப் போட்டியாக அந்நாட்டுக்கான தனது பல மில்லியன் டொலர் உதவிகளை உடனடியாக உடப்பில் போட்டுள்ளது. ஏற்கனவே மாலைதீவின் தற்போதைய அரசுப் பிரதிநிதிகள் சீன அரசுடன் நெருக்கத்தைக் கொண்டிருக்கின்றனர். தற்போது தனது நிதி உதவியை இந்தியா உடப்பில் போட்டுள்ளதால் மாலைதீவுக்கான நிதி உதவிகளை பெறும் போக்கில் அந்நாடு சீனாவிடம் நெருங்கி விடும். ஒரு சிறிய நாடு எவ்வித சமநிலையும் அற்ற நிலையில் இந்தியாவிற்குச் சவால் விடுகின்றது எனில் அந் நாட்டின் பின்புலத்தில் யாருள்ளனர் என்று ஆராயாமலே - குழந்தைகள் விளையாடுவதைப் போல - நிதி உதவியை நிறுத்தும் அறிவிப்பை இந்தியா வெளியிட்டமை அதன் வெளியுறவுக் கொள்கைப் பலவீனத்தைச் சுட்டுகின்றது.

பனிப்போரில் ஈடுபடும் தனது எதிரி நாட்டிடம் தனது ஆதரவு நாடொன்று விழுவதை தடுக்க முடியாத இந்திய வெளியுறவுக் கொள்கையின் வினைத்திறன் பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது.

ஆசியாவிலுள்ள சிறிய நாடுகளுக்கு இந்திய உதவி கிடைக்காத பட்சத்தில் உடனடியாக சீனா அவ்வுதவியை வழங்கத் தயாராயிருக்கின்றது. இதனையே அண்மையில் இலங்கையின் வணிகத் துறையினரால் விண்ணுக்குச் செலுத்தப்பட்ட விண்ணோடத்தின் செயற்றிட்டத்தின் தலைவர் திரு. மணிவண்ணன் அவர்கள் வெளிப்படுத்தியிருந்தார்.



விண்ணோடத் திட்டத்திற்காக முதலில் தான் இந்தியாவையே அணுகியிருந்ததாகவும் இந்திய அரசோ அல்லது இந்திய நிறுவனங்களோ அச் செயற்றிட்டத்தை கருத்தில் எடுக்காத நிலையிலேயே தான் சீனாவை நாடியதாகவும் அதைத் தொடர்ந்து அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்குள் மேலும் இரண்டு விண்ணோடங்களை வானுக்கு அனுப்பும் செயற்றிட்டங்களை சீனாவுடன் தான் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்ததை நினைவு கூறுவது இக்கணத்தில் பொருத்தமுடையது. எனவே இந்தியாவை விட்டால் சீனா என்ற நிலை மேலோங்கிவருவதை ஏன் இந்தியா இன்னமும் உணரத் தயாரில்லை என்பதே இங்கு கேள்விக் குறி?.

அத்துடன் மற்றோர் விடயமும் இங்கு கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். சீனா திடீரென தனது தென்சீன கடற்பிரதேசத்தினுள் நுழையும் சந்தேகத்திற்கு இடமான கடற்கலங்களை பரிசோதனை செய்யப்போவதாக அறிவித்ததைத் தொடர்ந்தே இந்திய கடற்படைத்தளபதி தாம் தென்சீனக் கடற்பரப்புக்குள் நுழையத்தயார் என்று மேற்கொண்ட அறிவிப்பானது வெளியாகியது. வியட்நாமுடன் இந்தியா இவ்வருட நடுப்பகுதியில் மசகு எண்ணெய் அகழ்வு ஒப்பந்தங்களில் ஈடுபட்டதைத் தொடர்ந்து சீனா எரிச்சலடைந்திருந்தது [illegible] சீனாவின் தென்சீனக் [illegible] அமைந்திருப்பதால் அக்கடலினுள் நுழையவேண்டிய தேவை இந்தியாவிற்கு உண்டு. இக்களேபரங்களுக்குள் இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் சீனாவிற்கு அரசுமுறை பயணம் மேற்கொண்டிருந்தார். அப்போது அவர் இவ்விடயங்கள் தொடர்பாக எதனையும் சீனத்தலைமையுடன் பேசவில்லை என்று வெளிப்படுத்தியிருந்தார்.

எனவே பாதுகாப்பு, பொருளாதாரம், கடற்றொழிற்றுறை (Maritime) போன்றவற்றின் வெளியுறவுத் தொடர்பாடல் இந்தியாவில் ஓர் நிலையான அச்சில் நகர்வதைப் போலல்லாமல் தமக்கென தனிப்பட்ட வெளியுறவுக் கொள்கையைக் கொண்டமைந்தவை போலவும் அந்நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே அவை இயங்குவதைப் போலவும் காணப்படுகின்றன.

அடுத்து இலங்கையை எடுத்துக் கொள்வோமானால் இலங்கையின் பொருளாதாரக் கொள்கையானது இந்தியாவை தூரத்தில் வைத்திருக்கும்படியான போக்கையே காட்டுவதாக சிங்கப்பூரின் லியா திவான் யூ வெளியுறவுக் கொள்கைகள் பாடசாலையின் பொருளாதார வல்லுனர் ஒருவர் தமிழ்கார்டியன் இணையத்தளத்திற்கு வழங்கிய செவ்வியில் கூறியுள்ளார்.

இலண்டன்ஸ்கூல் ஒவ் பிஸினஸ் கல்லூரியின் கலாநிதி ரசீன் சாலியின் கருத்தானது "இலங்கையின் வெளியுறவுக் கொள்கை இலங்கையின் வெளிநாட்டுப் பொருளாதாரக் கொள்கையை உள்ளடக்கியுள்ளதுடன், அதன் போக்கானது பக்கம் சார்ந்ததாகவே (Lop-sided) இருப்பதாக தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையின் வெளிநாட்டுப் பொருளாதாரக் கொள்கையானது அடிப்படையில் சீனாவையே தனது முதல் நண்பனாக கொண்டுள்ளதுடன் முன்னைய நாள் நண்பர்களுள் முக்கியமான சிலரை ஒதுக்கித் தள்ளியிருப்பதுடன் இந்தியா போன்ற சிலரை "கைக்கெட்டும்" தூரத்திலேயே பேணுவதாக தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பூகோள அமைவிடத்தைக் கொண்டு பார்ப்போமானால் இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான வர்த்தகம் தற்போதுள்ள 6% த்தை விட பல மடங்கு அதிகமாக இருக்கவேண்டும் என்று கூறும் சாலி அவர்கள் தற்காப்பு எண்ணம் மற்றும் தலைக்கணம் (Chauvinistic) போன்றவற்றால் இந்தியாவை இலங்கை தவிர்ப்பதையே காணமுடிகின்றது என்றும் இயம்பியுள்ளார்.

எவ்வாறிருந்த போதிலும் இலங்கை போன்ற சிறிய நாடுகளுடன் மிக மென்போக்கென வெளியுறவுக் கொள்கையைக் கொண்டுள்ளதால் இந்திய வெளியுறவுக் கொள்கை சீனா இந் நாடுகளில் கால் பதிக்க ஏதுவாகி விடுகின்றது.

அதற்கான மற்றோர் காரணத்தைப் பார்ப்போமானால் இலங்கையின் திருமலையின் சம்பூரில் நிலக்கரி மின் உற்பத்தி நிலைய நிர்மாணிப்பை இந்தியாவிடமிருந்து திறந்த சந்தை ஊடாக சீனாவிடம் கையளிக்கவே இலங்கை விரும்புகின்றமையை கடந்தவார கள நிலவரங்கள் வெளிக்காட்டியுள்ளன.

இந்தியாவுடனான பேச்சுக்கள் தோல்வியடையுமானால் நிலக்கரி மின்னுற்பத்தி தொடர்பாக அடுத்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்மானிப்பதற்காகக் கூடிய இலங்கை மின்சார சபைப் பணிப்பாளர்களின் கூட்டத்திலேயே திறந்த சந்தையில் கேள்விப் பத்திரங்களைக் கோர வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திறந்த சந்தையெனில் அங்கு போட்டித் தன்மையே இருக்கும் என்றும் எவரும் கேள்வியில் வெற்றி பெறலாம் என்றும் சாதாரண வாசகன் நினைப்பது சரியானதே. எனினும் உண்மை நிலவரம் என்ன என்பதை கடந்த வார சண்டே டைம்ஸ் இதழ் வெளியிட்டுள்ள தகவல்களிலிருந்து அறிய முடிகின்றது.

இலங்கையின் திறந்த சந்தையில் சீனக் கம்பனிகளே செல்வாக்குச் செலுத்துவதாகவும் அக் கம்பனிகள் பொதுவான கேள்வி நடைமுறைகளைப் பின்பற்றாமல் இடைத்தரகர்களுக்கு தரகு வழங்கித் தமக்கான ஒப்பந்தங்களைப் பெற்றுக் கொள்ளவதாகவும் இந்தியக் கம்பனிகள் தெரிவித்துள்ளதாக கூறியுள்ளது.

அத்துடன் தரகுப் பணமாக 120 தொடக்கம் 180 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பரிமாற்றப்படுவதாகவும் அச் செய்தி தெரிவிக்கின்றது.

எனவே திறந்த சந்தை என்பதில் இந்திய ஆதிக்கம் இலங்கையைப் பொறுத்தவரை பூச்சியமாகவே உள்ளது.

எனினும் பொருளாதாரத் துறை சார்ந்து இந்தியா வெறுக்கப்படும் அதே நேரத்தில் தான் பாதுகாப்புத்துறை சார்ந்து இலங்கையுடன் இந்தியப் படைகள் கூட்டுப்பயிற்சியில் ஹிமாலயப் பிரதேசத்தில் ஈடுபட்டுள்ளது தெரியவருகின்றது.

எனவே இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையில் உறுதித்தன்மையற்று பாதுகாப்பு, கடல்வாணிபம், பொருளாதாரம் போன்ற ஒவ்வொரு துறைகளுக்குமான வெளிவிவகாரங்களை தனித்தனியாக கையாளுவதாகவே தெரிகின்றது.

வெளியுறவுக் கொள்கைகளில் இந்தியா காந்தீயக் கொள்கைகளை விடுத்து வல்லரசுக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டிய தேவை கடுமையாக எழுந்துள்ளது. அவ்வகைக் கொள்கை வகுப்பும் முன்னெடுப்புமே ஆசிய வல்லரசைத் தீர்மானிக்கவுள்ளன.

இந்நிலையாலும் அந்நாட்டின் வெளியுறவுக் கொள்கைக் கோட்பாடுகளான போட்டியை விடக் கூட்டுறவு, மோதலைவிட ஒற்றுமை ஆகியவற்றால் ஆசியப் பிராந்தியத்தில் சீன உறுதித் தன்மைக்கு கால்கோளிடப்பட்டு இந்தியா கையறுநிலை அடைவதைத் தவிர்க்க முடியாது போய்விடும்.

– மாயன் –

**உசாத்துணை**

- The Hindu
- The Sunday Times
- "சமகாலம்" வீரகேசரி வெளியீடு முன் அரைமாதம் - டிசம்பர், 2012
- Tamil Guardian
- BBC World news

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வலம்

## போரிடும் ஆற்றலை அதிகரிக்கும் இந்தியா

இந்திய நாட்டிற்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள இரஸ்ய சனாதிபதி விளாடிமிர் புட்டின் பல பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதி வாய்ந்த பாதுகாப்பு ஒப்பந்தங்களில் இந்திய பிரதமர் மன்மோகன்சிங்குடன் மேற்கொண்டுள்ளார்.

இவ் ஒப்பந்தங்கள் ஊடாக இந்தியா 46 சுக்கோய் யுத்த விமானங்களையும், 71 எம்.ஐ -17 ரக உலங்கு வானூர்திகளையும் பெற்றுக் கொள்ளவுள்ளது. சுக்கோய் ரக தாக்குதல் விமானங்கள் இந்தியாவில் வைத்தே இணைக்கப்பட்டு வருகின்றன.

இவ்விமானத்தில் இந்தியத் தயாரிப்பு ஏவுகணையான பிரம்மாஸ் இணைக்கப் பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

## ஈரானின் ஒரேயொரு பெண் அமைச்சர் பதவியிழந்தார்


ஈரானிய அமைச்சரவையின் ஒரேயொரு பெண் அமைச்சரான மார்சியா வாகித் அவர்களை சுகாதார அமைச்சர் பதவியிலிருந்து ஈரானிய சனாதிபதி அகற்றியுள்ளார்.

ஈரானின் முதல் பெண் அமைச்சரும் அந் நாட்டின் முப்பது வருடகால சனநாயக ஆட்சியில் ஒரேயொரு பெண் அமைச்சருமான வாகிட்.

ஈரானிய சுகாதாரத் துறையின் பாதீட்டிற்கு ஏற்ப அவரால் செயற்பட முடியாது போய்விட்டது என்ற குற்றச்சாட்டினாலேயே அவரது பதவி பறிக்கப்பட்டுள்ளது.

சர்வதேசக் கட்டுப்பாடுகளால் கடும் விலைத் தளம்பல்களை ஈரான் தற்போது அனுபவித்து வருவதாலேயே மருத்துவச் செலவுகளுக்கு பெருமளவு செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாக ஈரானை அவதானிக்கும் சர்வதேச அவதானிகள் கருத்துரைத்துள்ளனர்.

## வீடு திரும்பினார் நெல்சன் மண்டேலா அவர்கள்



வைத்தியசாலையிலிருந்து நெல்சன் மண்டேலா அவர்களை வீட்டிற்கு விடுவித்துள்ளதாக தென் ஆபிரிக்க வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கடந்த 18 நாட்களாக நுரையீரல் தொற்றினாலும் சிறுநீர்ப்பைக்கல் வலியாலும் அவதியுற்றிருந்த நெல்சன் அவர்கள் மருத்துவ சிகிச்சையின் பின் வீடுதிரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மண்டேலா அவர்கள் வீட்டிலிருந்தவாறும் தொடர்ந்து மருத்துவ சிகிச்சைகளைப் பெற்ற வண்ணமே இருக்க வேண்டும் என்றும் முழுச் சுகமடைந்த பின்னரே அவர் மருத்துவ கண்காணிப்பில் இருந்து விடுவிக்கப்படுவார் என்றும் அவ்வ வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கிறிஸ்மஸ் தினத்தன்று வைத்தியசாலைக்கு வருகை தந்திருந்த தென் ஆபிரிக்க சனாதிபதி நெல்சன் மண்டேலா அவர்களைப் பார்வையிட்ட பின் வெளியிட்ட கருத்து - அவர் மிகச் சுகமாகவும் மனதளவில் திடகாத்திரத்துடனும் உள்ளார் - என்பதாகும்.

மண்டேலா அவர்களின் மனைவி கிறேஸ்மிச்சேல் அவர்கள் மண்டேலாவின் உடல்நிலை மெதுவாக மேம்பட்டு வருவதாகவும் வைத்தியர்களின் கடும் முயற்சி அவரை விரைவாகவே குணமாக்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்கர்கள் இரஸ்யக் குழ[illegible]களைத் தத்தெடுக்க முடியாது - சனாதிபதி புட்டின்

அமெரிக்கர்கள் இரஸ்யக் குழந்தைகளைத் தத்தெடுப்பதற்குத் தடைகளை விதிக்கப் போவதாக இரஸ்ய சனாதிபதி விளாடிமிர் புட்டின் அறிக்கையிட்டுள்ளார். தனது நாட்டுக் குழந்தைகளின் எதிர்கால நன்மைகளைக் கருத்திற்கோண்டே இம் முடிவை நோக்கி தாம் திரும்பியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

எமது நாட்டைவிட நல்ல வாழ்நிலையைக் கொண்ட பல நாடுகள் உலகில் இருக்கத்தான் செய்கின்றன. அதற்காக எமது நாட்டுக் குழந்தைகள் அனைத்தையும் அந்நாடுகளுக்கு அனுப்பிவைக்கப் போகின்றோமா அல்லது நாம் அனைவரும் அந் நாடுகளை நோக்கி நகரப் போகின்றோமா என தன் நாட்டு மக்களிடம் கேள்வி எழுப்பிய புட்டின் உறுதியும் பொறுப்பும் மிக்க நாடு என்ற வகையில் தனது இம் முடிவுக்கு அனைத்து இரஸ்யர்களும் மதிப்பளித்து நடக்க வேண்டும் என்று மக்களை நோக்கிக் கோரிக்கையிட்டுள்ளார்.

தற்போது வரை என் முன்நிலைப்படுத்தப்பட்டுள்ள இச் சட்டத்திற்கு ஒப்பமிட மறுக்கும் எந்தக் காரணங்களும் இல்லை எனத் தெரிவித்துள்ள அவர் ஒப்பமிடுவது மட்டுமின்றி தனது நாட்டின் அனாதரவான குழந்தைகள் தொடர்பான அவதானத்தையும் நடவடிக்கைகளையும் முன்னெடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்திருந்தார். அமெரிக்கத் தகவல்களின் படி 1992ம் ஆண்டிலிருந்து தற்போதுவரை சுமார் அறுபதாயிரம் இரஸ்யக் குழந்தைகள் அமெரிக்கத் தம்பதிகளால் தத்தெடுக்கப்பட்டு அமெரிக்காவிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. புட்டினின் இந்நடவடிக்கை[illegible] கவே அமெரிக்கா [illegible] அத்தகவல் தெரிவிக்கின்றது.

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள்

1. நீரின் மூலம் பரம்பலடையும் வித்துக்களின் பண்புகள் அல்லாதது?
   அ. நீரில் மிதக்கக்கூடிய இயல்பைக் கொண்டிருத்தல்.
   ஆ. பாரம் குறைவாக கொண்டிருத்தல்.
   இ. கொழுக்கி போன்ற அமைப்பைக் கொண்டிருத்தல்.
   ஈ. நார்களுக்கிடையே வளிப்படை காணப்படுதல்.
   உ. முட்கள் போன்ற அமைப்பு காணப்படுதல்.
   1. அ, ஆ 2. இ, உ 3. இ, ஈ
2. விலங்கு மூலம் பரம்பலடையும் வண்டு போன்று காணப்படும் வித்து அல்லாதது?
   1. ஆமணக்கு 2. புலிநகம் 3. சூரியகாந்தி
3. பலா இலையின் வடிவத்தை ஒத்த இலை யாது?
   1. ரம்புட்டான் 2. கத்தாப்பு 3. மஞ்சவணா
4. ஆண்டிற்கு ஒரு தடவை இலைகளை உதிர்க்கும் மரம் எது?
   1. ஆலமரம் 2. நெருப்புவாகை 3. இபில்இபில்
5. வீட்டுத்தோட்டத்தில் காணப்படும் ஆணிவேரைக் கொண்ட தாவரம் எது?
   1. கரும்பு 2. பப்பாசி 3. சோளம்
6. ஆண்டுக்கொரு தடவை பூத்துக் காய்க்கும் மரம் எது?
   1. வேம்பு 2. வாழை 3. தென்னை
7. அதிக நாட்கள் வாடாது இருக்கும் பூ, எது?
   1. வாடா மல்லிகை 2. எக்சோரா 3. ஓர்க்கிற்
8. ஒளித்தொகுப்பிற்கு உதவும் ஆனால் வித்துமுளைத்தலுக்கு அவசியமில்லாத காரணி எது?
   1. வெப்பம் 2. நீர் 3. சூரியஒளி

**கீழுள்ள பாடலைக் கொண்டு 9, 10ம் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிக.**

மீனினம் ஒடிப் பறக்குதம்மா - ஊடே
வெள்ளி ஓடம் தன்று செல்லுதம்மா
வானுங் கடலுமாக மாறுதம்மா - இந்த
மாட்சியிலுள்ளம் முழுகுதம்மா

9. இங்கு 'வெள்ளி ஓடம்' என்பதன் பொருள்?
   1. வால்வெள்ளி 2. நிலா 3. படகு
10. இப்பாடல் எவ்வேளைக்குரியது?
   1. மதியம் 2. அதிகாலை 3. இரவு
11. தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்?
   1. சபுகஸ்கந்த 2. தலவாக்கல 3. அகலவத்தை
12. **கீழுள்ள தகவலை வாசித்து விடையளிக்குக.**

பை ஒன்றில் 5 நீலநிறப் பந்துகளும், 3 வெள்ளை நிறப்பந்துகளும் 4 பச்சை நிறப்பந்துகளும் 3 சிவப்பு நிறப்பந்துகளும் இருந்தன. இப்பந்துகள் முழுவதும் 3 சந்தர்ப்பங்களில் கையைவிட்டு வெளியே எடுக்கப்பட்டன. முதலாவது தடவை 2 நீல, 1 வெள்ளை, 2 பச்சை, 1 சிவப்பு நிறப் பந்துகள் எடுக்கப்பட்டன. இரண்டாவது தடவை 2 சிவப்பு, 1 வெள்ளை மற்றும் 1 நீல நிறப் பந்தும் எடுக்கப்பட்டன. எனின் மூன்றாவது தடவை வெளியே எடுக்கப்பட்ட பந்துகளின் விபரம்?
   1. 1 நீலம், 1 வெள்ளை, 1 பச்சை, 2 சிவப்பு
   2. 2 பச்சை, 2 நீலம், 1 வெள்ளை
   3. 2 நீலம், 1 வெள்ளை, 2 பச்சை, 1 சிவப்பு

13. ஒரு மரக்கிளையில் 16 பறவைகள் இருந்தன. ஒரு வேடன் ஒரே தடவையில் 5 பறவைகளைச் சுட்டு வீழ்த்தினான். பின்பு மரக்கிளையில் இருந்த பறவைகளின் எண்ணிக்கை யாது?
   1. 11 2. 10 3. 0
14. ஒரு பெட்டியில் 95 முட்டைகள் இருந்தன. அப்பெட்டியிலிருந்த எண்ணிக்கையின் இருமடங்கிலும் 15 குறைவாக இன்னொரு பெட்டியில் இருந்தன. எனின் இருபெட்டிகளிலும் இருந்த முட்டைகளின் எண்ணிக்கை யாது?
   1. 285 2. 270 3. 285
15. 5 நண்பர்கள் சேர்ந்து மலை ஏற ஆரம்பித்தார்கள். 5 பேரும் மலைஉச்சியை அடைய 10 நாட்கள் எடுத்தன. எனின் ஒருவருக்கு மலைஉச்சியை அடைய எத்தனை நாட்கள் எடுத்தது?
   1. 2 2. 50 3. 10
16. ஒரு மாணவர் 4 பாடங்களில் பெற்ற புள்ளிகள் முறையே 85, 77, 92, 78 ஆயின், அவனது சராசரிப் புள்ளி என்ன?
   1. 332 2. 83 3. 80.5
17. ஒரு வியாபாரி தன்னிடமிருந்த விளாம்பழங்களில் 12 பழுதடைந்த பழங்களை வீசிய பின் எஞ்சியுள்ள பழங்களை 8 சம குவியல்களாகக் குவித்தார். ஒரு குவியலில் இருந்த பழங்களின் எண்ணிக்கை 22 எனின், அவரிடம் ஆரம்பத்தில் இருந்த பழங்கள் எத்தனை?
   1. 176 2. 188 3. 118
18. 3140 நிமிடங்களை நாள், மணி, நிமிடத்தில் தருக?
   1. 2 நாள் 4 மணித்தியாலம் 20 நிமிடம்
   2. 2 நாள் 4 மணித்தியாலம் 2 நிமிடம்
   3. 2 நாள் 2 மணித்தியாலம் 20 நிமிடம்.

- பிரதீபா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 126வது ஆண்டிலாவது கைகூடுமா கலை இலக்கிய வாதிகளின் ஒற்றுமை

திருக்கோணமலையின் கலை இலக்கியம் இவ்வாண்டு முடிவோடு தனது 125வது வரலாற்றாண்டை கடக்கிறது. சமூக, அரசியல், கேந்திர சமய ரீதியாக பழமை பேணும் இம்மண்ணின் கலை இலக்கிய வரலாற்றை 1887ஆம் ஆண்டு தட்ஷிணகைலாய புராணத்தோடு (இந்நூல் மட்டுமே ஆதாரமாக கிடைத்த மிகப் பழைய நூல் ஆகையால் அன்றிலிருந்தே திருமலை இலக்கிய வரலாறு தொடங்குவதாக கொள்ளப்பட்டுள்ளது) தொடங்குகையில் இவ்வரலாற்று நகர்வை எம்மால் உணரமுடியும்.

ஈழத்திலக்கிய தளத்திலும் சரி, ஈழத்தரசியல் தளத்திலும் சரி திருக்கோணமலைக்கு எப்போதுமே தனி ஆதியிருப்பதை எவரும் புறந்தள்ளி இருந்துவிட முடியாது. கிழக்கு மக்களின் அரசியல் தலைநகராக, உரிமைப்போராட்ட வரலாற்றில் அகிம்சையாயுத முடிவுகளின் தோற்றுவாய்களுள் ஒன்றாகவும், ஏன் நான்காம் கட்ட ஈழப்போரின் தொடக்கமாயும் அமைந்தது இத்திருமலையே. (இவ்விடத்தில்

**-தில்லைநாதன் பவித்ரன்-**



அரசியல், போராட்ட வரலாற்றைக் கூற முற்படவில்லை).

எனவே அரசியல் ரீதியாக முக்கியம் பெற்ற இம்மண் புராண காலத்திலிருந்து கலைகளும், மரபுகளும், வரலாறுமாக விரிகிறது. ஈழத்தின் முதற்புராணமென மதிக்கப்படுகின்ற "தட்ஷிண கைலாயம்'' தொடங்கி ஈழ மூத்த நாவல்களான ஊசோன் பாலந்தை மற்றும் மோகனாங்கி ஊடாக இந்த 21ஆம் நூற்றாண்டின் நவீன இலக்கியங்கள் வரை திருமலையின் கலை இலக்கிய வரலாற்றை பெருமை பேசிக்கொண்டே போகலாம். (திருமலையின் விரிவான இலக்கியப் போக்கைக் கூற முற்படவில்லை)

இத்தகையதான திருக்கோணமலையின் கலையிலக்கியம் இன்று சாபக்கேடொன்றை பெற்றுச் சனிவிலகா நிலை போல தாழ்ந்து போய்க்கொண்டிருக்கிறது. ஆரம்ப வரலாற்றில் விடப்பட்டதா? இத்தவறு, இல்லை இடைக்காலத்தில் எழுப்பப்பட்டதா? இல்லை, இன்றையகால இலக்கிய தலைமுறையில் ஏற்பட்ட இடைவெளியின் காரணமா? எது என்று சரியாக ஊகித்துவிட முடியாதுள்ளது. மரபும், புதுமையும், நவீனமும் பேணும் இவ்விலக்கிய மண்ணில் இலக்கிய கர்த்தாக்களிடையே இடம்பெற்று வருகின்ற கூதல் போருக்குக் காரணம்.

இன்றைய திருமலையின் இலக்கியப் போக்கில் காணத்தக்க மாபெரும் குறைபாடாக கருதக்கூடியது, இலக்கியத்துக்கென்று தனியான ஒரு பொது அமைப்போ அல்லது நிறுவனமோ இல்லாதிருப்பது. இக் குறைபாட்டின் காரணமாக திருமலையின் இலக்கியம் தனது காத்திரத்தன்மையை இழந்து வருகிறது. நெடுங்கால பழமை கொண்ட இவ்விலக்கிய நகரிலே பொதுமைப்படுத்தப்பட்ட அனைத்து கலையிலக்கிய, சமூக ஆர்வலர்களை உள்ளீர்ப்புச் செய்ததான ஒரு மா சபையின் கேள்வி நீண்ட காலமாகவே நிரம்பல் செய்யப்படாது உள்ளது.

மாதம் குறையாதது இரண்டுக்கு மேற்பட்ட இலக்கிய செயற்பாடுகள் திருமலையில் இடம்பெற்று வருகின்ற போதிலும் அவையும் எத்தனையோ முரண்பாடுகள், பெருமிதங்கள், புறக்கணிப்புக்கள் என ஊனமான நிலையிலேயே நடந்து வருகின்றன. இவ்வாறான நிலைக்குக் காரணம் கூறவோ, ஆராய்ந்து முடிந்த தெளிவைப் பெறவோ இக்கலையிலக்கிய வாதிகள் எவரும் முயன்றதாய் தெரியவில்லை. இனியும் பொறுத்திருந்து சாதிக்கலாம், காலம் பிறக்கும், நாம் என்ன செய்வது என்ற வார்த்தைகளை பிறப்பித்துக் கொண்டிருக்கும் வாய்கள் இனி முடக்கப்படவேண்டும்.

இனியும் உண்மைகளை மறைக்கவோ அல்லது முகம் பூத்தலையோ, முதுகு சொறிதலையோ பேணிப்பாதுகாக்க முற்படுவோமானால் எமது பாரம்பரிய இலக்கிய மரபை நாம் இழந்துவிடுவோமோ என்ற அச்சத்தில் இக்குறை பேசு கதையை எழுதுகிறேன்.

திருமலையின் இலக்கியப் போக்கில் பின்வரும் குறைபாடுகளை முன்னெடுக்க முடியும்.

- பொதுமைப்படுத்தப்பட்ட இலக்கிய நிறுவனம் ஒன்று வளர்ச்சியடையாமை
- வளரத்தக்க பொதுமைப்படத்தக்க நிறுவனத்தை கலையிலக்கியவாதிகள் ஆதரிக்காமை
- தான்தோன்றித் தனங்களும் - பெருமை பேசலும், இலக்கிய வாதிகளின் முதல் இலக்கணமாக பேணப்பட்டு வருகின்றமை.
- மூத்த இலக்கியவாதிகளிடையே ஒற்றுமையின்மை
- இளையவர்களை சரியான முறைக்கு நெறிப்படுத்தாமையும், குறைகூறலும், தமது அபிலாஷைகளுக்காக மட்டும் பயன்படுத்துதலும்.
- இலக்கியத்தை சமூக மயப்படுத்த தவறுதல்.
- வெளிப்படையாய் தெரியாத பிரதேச வாதத்தை பேணுதல்.

இவ் ஒவ்வொரு குறைபாடுகளையும் உள்ளீர்த்து பார்க்கும் பட்சத்தில் ஏற்கனவே நான் கூறியது போல் பொதுமைப்படுத்தப்பட்ட இலக்கிய நிறுவனம் ஒன்றினது திறம்பட்ட வளர்ச்சியை இன்னும் காணமுடியாதுள்ளது. இங்கு இலக்கிய நிறுவனங்கள் தோன்றினாலும் அவை தோன்றல், மறைதல் எனும் நிலையிலும் தோன்றிய சில அமைப்புக்கள் உறங்கு நிலையிலும் காணப்படுகின்றது. ஒவ்வொரு அல்லது ஒருசில இலக்கிய வாதிகள் அல்லது ஆர்வலர்கள் தமக்கென்று ஒவ்வோர் அமைப்பை தோற்றி செயற்படலை அவதானிக்க முடிகிறது.

திருமலையின் இலக்கியப் போக்கில் 1969 - 1970 காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட சங்கப்பலகையுடன் ஆரம்பமாகும் நிறுவன ரீதியான இலக்கிய செயற்பாடுகள் முன்னோடிகள், ஈழத்து இலக்கியச் சோலை, மனித வள மேம்பாட்டு நிறுவனம் என முதற்கட்ட அமைப்புக்களுக்குப் பின் இன்றைய நிலையில் திருக்கோணமலை கலை இலக்கிய ஒன்றியம், நீங்களும் எழுதலாம், இளங்கோ கழகம், பகிர்வுகள், கலை கலாச்சார அபிவிருத்தி அமையம், அறிவோர் அரங்கம் என பிற்கட்ட அமைப்பு ரீதியான பரவலை செய்திருக்கிறது. இதில் சில அமைப்புக்கள் இன்று உயிர்ப்புநிலையிலும், உறங்கு நிலையிலும் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. பொதுவான அமைப்பு ஒன்று இன்னும் நிறுவப்படவில்லை என்பதே உறுதி. எனினும் திருக்கோணமலைமாவட்ட கலை இலக்கிய ஒன்றியம் கலைவாதிகளையும் இணைக்கும் ஒரு முயற்சியை மேற்கொண்டாலும் அதுவும் தோல்வியிலேயே முடிந்துள்ளதை காணலாம். எனவே வளரத்தக்க பொதுமைப்படுத்தப்பட்ட இலக்கிய அமைப்பாக வந்த திருக்கோணமலை கலை இலக்கிய ஒன்றியத்தை ஏன் கலையிலக்கியவாதிகள் ஆதரிக்காமல் விட்டார்கள் என்பதும் இன்றளவில் ஆதரிக்கவில்லை என்பதும் உண்மைதான்.

இத்தகைய அமைப்பு ரீதியான ஒற்றுமையில்லாத நிலையில் இலக்கியவாதிகளிடையே எழும் தான்தோன்றித்தனங்களும் பெருமை பேசலும் எழுவது சாதாரணமாகவே இடம்பெற்றுவருகிறது. சிலர் பெருமைபற்றி பேசாது பெருமைபற்றி பேசச் செய்பவர்களாகவும் திகழ்கின்றனர். இவ்வாறு பேசுபவர்கள் பிரதேச இலக்கியத்துக்கு எத்தகைய சாதனையை நிகழ்த்தினார்கள் என்பது கேள்விக்குறியே. எடுத்துக்காட்டாக அண்மையில் நடந்தேறிய கிழக்கு மாகாண இலக்கிய விழாவை குறிப்பிடலாம். மட்டக்களப்பு, அம்பாறை இடங்களை சேர்ந்தவர்கள் மட்டுமே அங்கு வளவாளர்களாக இடம்பெற்றிருந்தார்கள். இந்நிலையில் தான் இருக்கிறது இவர்களின் பெருமை பேசல்.

அடுத்து மேடை ஆசைபிடித்தவர்களும், ஒலிவாங்கிப் பிரியர்களும் ஒருபுறம். கல்விமான்கள், சமூக முன்னோடிகள் என்று சொல்லக்கூடிய சிலர் அழைப்பிதழில் தமது பெயர் குறிப்பிடாதுவிட்டால் அவ்விடத்துக்கு வரமாட்டார்கள். அதேவேளை ஒருவர் வருகின்ற நிகழ்வை வேண்டுமென்று ஒருசிலர் அல்லது ஒருவர் புறக்கணிப்புக்களை மேற்கொள்ளும் நிலையைக் காணலாம். இதற்கு ஓய்வு பெற்ற அதிபர்கள் தொடங்கி, மூத்த கவிஞர்கள் வரை இன்றைய புதிய அரசியல் உறுப்பினர்களும் விதிவிலக் கானவர்கள் அல்ல. இந்நிலை மாற்றப்பட வேண்டியதொன்று.

"யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்" என்னும் வள்ளுவன் குறலை இவ்விடத்தில் ஞாபகப்படுத்த விளைகிறேன்.

மேற்கண்ட பெருமை பேசலினால் ஏற்பட்ட அடுத்தகட்ட விளைவு மூத்த இலக்கியவாதிகளிடையே ஒற்றுமையின்மையாகும். வெளிப்படையாக நகைத்துக் கூடினாலும், அவர்கள் ஒருவருக்கொருவர் நையப்புடைத்து ஊடும் நிலையிலேயே மறைமுகமாக இருந்து வருகிறார்கள். இளையவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கவேண்டிய இவர்களின் ஒற்றுமையீனம் அவர்களை மட்டும் பாதித்ததல்ல. எதிர்கால சந்ததியின் இலக்கிய முயற்சிக்குத் தடைக்கல்லாகவே அமைந்து வருகிறது. இத்தகைய நிலையால் இளையவர்களை சரியான முறைக்கு நெறிப்படுத்தும் தகுதியை அவர்கள் இழந்துவிடுகிறார்கள். இந்நிலையில் தங்களுக்கு, தமது செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்காத இளையவர்களை குறைகூறும் நிலையை பேணிவருகிறார்கள்.

மேலும் இக்கலையிலக்கிய பிரமுகர்களிடையே வெளிப்படையாய் தெரியாத பிரதேச வாதத்தையும் காணலாம். இது இவர்களிடையேயான பிரிவினையை இன்னும் வலுச்சேர்த்துக் கொண்டிருக்கிறது. இத்தகைய பிளவுகளும், பிரிவினைகளும் காரணமாக சமூகத்தை தளமாக கொண்டு இயங்கவேண்டிய இலக்கியம் ஒவ்வோர் இலக்கியவாதிகளினதும் தான் தோன்றித்தனங்களை தளமாக கொண்டு செயற்பட்டுவருகிறது.

"தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கோர் குணமுண்டு
அமிழ்தம் அவனுடைய வழியாகும்
அன்பே அவனுடைய மொழியாகும்"

என்ற நாமக்கல்லாரின் கூற்றில் ஒன்றித்து எமது சமூக விடுதலைக்கு உரமூட்டவேண்டிய தேவை ஏற்பட்டிருப்பதை நாம் இனியும் உணராதுவிட்டால் வரலாற்றுப்பெருமை கொண்ட திருக்கோணமலையின் கலையிலக்கியம் நீறாவதுதான் திண்ணம். மேலே நான் கூறிய குறைபாடுகளுக்கு பல எடுத்துக்காட்டுக்கள் இருந்தும் அவற்றை இவ்விடத்தில் கூற நான் வெளிப்படவில்லை என்னது நோக்கம் முழுவதும் கலையிலக்கிய பிரமுகர்களின் ஒற்றுமையின் மூலம் திருக்கோணமலை கலையிலக்கியம் செழித்தோங்க வேண்டும் என்பதே. எதிர்காலத்தில் இக்குறைகளை களைவதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகிறேன் என்ற உறுதிமொழியுடன், இதற்கு ஏனைய கலையிலக்கியவாதிகளின் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் முடிக்கிறேன்.

"கண்டங்களெல்லாம் கடல் பூத்து நாளை
[illegible] கரை விழுங்கினாலும்
துண்டங்களாய் மிஞ்சி துளிராய் தமிழ்வரை
பிண்டங்கள் நாம் பிசைந்து ஒன்றாவோம்."

## நீ.. காற்று... நான் . . .

விழி நீளும் முடிவுவரைத்
தொடரும் தெரு வழியே
நடந்து போகின்றேன் - நான்
முகத்தை எதிர்கொள்ளும் காற்று
மற்றோர் திசையில்
தோள்களை வருடும்.
சுகம் பரப்பும்
தேகமெங்கும். . .

நீயும் காற்றுத்தான்

நம் காதலின் தெருவழியே
முடிவின்றித் தொடரும்
என் கால்கள் . . . . நீ
காற்றாய் தொடுகிறாய் என்னை

முகம் மோதும் காற்று
நாம் முத்தமிட்டதை
உணர்த்தும். . . இதழ்களில்
ஈரம் கசிக்கும் . .

சிலவேளை வியர்வையூறி
உப்புக்கசிந்துவர்த்த எம் முத்தம்
காற்றும் இதழ் மோதித் தரும்

நாக்கால் நிமிண்ட
உவர்க்கும் இதழ். . .

காற்றாய் நீ. . .
இரு கையின் ஐவிரலும்
தோள்களைப் பற்றிப்
பிடித்திழுத்து இறுக்கிப் பின்
பிடரியிற் பிரலும் உன் விரல்கள்

காற்றும் . . உன் கைவிரலும்
என் காதைத் தொட்டுச்
செய்யும் சில்மிசங்கள் .....

காற்றே நீதான்

என் மூச்சாய் உட்சென்றுயிராய்
மாறும்
என் காற்றே நீதான்.

கோபம் கொள்ளக்
காற்றும் குணம் மாறும் . . . .

தடாலென முகமறையும்
விழி முன்னே அங்கிங்காய்
அலையும். .
சினம் கொள்ளும்
உடல் நோகப் பலமுறை
உருட்டும்
நான் நடந்தேகும்
தெருவைத் தடுக்கும்

உன்னைப்போல்தான்
காற்றும். .

சினம் கொள்ளும்

முகமறையும் வார்த்தைகளால்
வெறிகொண்டு நீ
வலி வரக் கொல்வாய்
எனை – முகமறையும்
வார்த்தைகளால்........
பின் - என் முன்னலைவாய்
அங்கிங்காய் . . . .
அழுவாய் . . . .
எம் காதல் வழி மறைப்பாய்
தடம் மாறும் வண்ணம்
சினங்கொள்வாய். . .

சமாதானம் சொல்லிப்
பின்னும்
அழுவாய்

என் பெண்ணே......
காற்றைப் போல் நீயும். .
அழுது...
அலைக்கழித்து. .
அழவைத்துப்
போய்விட்டாய். .

காற்றை என்னுடன்
வாழவிட்டு . . .

**-சஞ்சுதன்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்தியக் ..!**

இயக்குவருகையாகவே இந்தக் கப்பல் வருகை தந்துள்ளதாகத் தெரிய வருகின்றது. லெப்டினட் கமாண்டர் அக்ஸய் திக்சித் தின் தலைமையில் இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் சமீத் கபூர் இக்கப்பலில் வருகை தந்துள்ளனர். அவர்களை கிழக்குக் கடற்படையின் இலங்கைக் கமாண்டர் ரியல் அட்மிரல் ரவீந்திர விஜயகுணரத்ன அவர்கள் வரவேற்றிருந்தார்.

அதிவேகத் தாக்குதல் கப்பல் இரகமாக கார்-நிக்கோபர் ௨7ம் திகதி வரை துறைமுகத்தில் தரித்துச் சென்றுள்ளது. இக்காலப்பகுதியில் இலங்கைக் கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட வைபவங்களில் இந்தியக் கடற்படையினர் பங்கு கொண்டிருந்தனர்.

தென் கிழக்குச் சீனக் கடற்பகுதியில் கடும் முறுகல் நிலை காணப்படும் இக் காலப்பகுதியில் இந்தியக் கடற்படை எக்கணத்திலும் தென் சீனக் கடலில் புகத் தயாராயுள்ளது என இந்தியக் கடற்படைத் தளபதி அறிக்கையிட்டுள்ள இக் காலப்பகுதியில் இந்திய அதிவேகத் தாக்குதல் ஓடம் இலங்கையின் கிழக்குக் கடல் பகுதியில் தனது இயக்கு வருகையைப் பதிந்திருப்பது ஓர் முக்கியத்துவம் வாய்ந்த பயணமாகவே உள்ளது.





**காணமற். . .**

உப்பாற்றுப் பகுதியில் மீனவரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மாடுகளை மறு கரையில் விட்டு விட்டு வரும் வழியில் நண்பர்களை தவற விட்ட குறித்த நபர் ஆற்றை கடக்கும் முயற்சியின் போதே கங்கையாற்றின் வெள்ளப்பெருக்கில் அள்ளுப்பட்டுச் சென்றிருக்க வேண்டும் என்று மலைமுரசு நிருபர்களுக்கு கிராம வாசிகள் தெரிவித்தனர்.

# 07ம் ஆண்டு நினைவஞ்சலி


திருமலைக் கடற்கரையில் ௦௨.௦1.௨௦௦6 மாலை வேளையில் கொல்லப்பட்ட ஐந்து மாணவர்களின் 07 ம் ஆண்டு நினைவு நாள் ௦௨..௦1.௨௦13ல் அவர்களின் நண்பர்களாலும் பெற்றோராலும் நினைவு கூறப்படவுள்ளது. இவர்கள் திருமலை இ.கி.ச கோணேஸ்சரா இந்துக் கல்லூரியின் மாணவர்கள் ஆவர்.

## 7ம் ஆண்டு நினைவஞ்சலி

1985 → 2006 —— 2013

**02.01.2013**

**எம்மை விட்டு பிரிந்தாலும் நம் மனதோடு வாழ்ந்து கொண்டிருக்கும் எம் நண்பர்களுக்காக பிரார்த்திப்போம்.....**



ரஜிகர் ரொகாந் சிவானந்தா சஜேந்திரன் கேமச்சந்ரன்

**உங்களை நினைத்து உருகுவது மெழுகுதிரிகள் மாத்திரம் அல்ல எங்கள் இதயங்களும் தான்......:**

2004ம் ஆண்டு பாடசாலை நண்பர்கள்

**நமது முதலாவது ....**

திருக்கோணமலை இராணுவத் தளத்தில் நிகழ்ந்த நிகழ்வொன்றில் இக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டதாக அச் செய்தி மேலும் தெரிவிக்கின்ற போதிலும் அந் நிகழ்வு கிளிநொச்சி இராணுவத் தளத்திலேயே நிகழ்ந்துள்ளது.

இந் நிகழ்விற்கு அப் பெண்களின் பெற்றோரும் வந்திருந்த தாகவும் தெரியவருவதுடன் அவர்களது முதல் மாதச் சம்பளப் பணம் வங்கியிலிடப்பட்டு அதற்கான வங்கி வைப்புப் புத்தகங்களும் வழங்கப் பட்டுள்ளன.



**சுனாமிப் பேரலையின் .....**



திருமலை வலயக் கல்விப் பணிப்பாளர் திரு என். விஜயேந்திரன் அவர்களின் பிரசன்னத்தில் நிகழ்ந்த இந் நினைவு கூறலில் மெதடிஸ்த பேராலய முகாமைக்குரு வண.பிதா சுஜிதன் சிவநாயகம் அவர்களும் கலந்து கொண்டிருந்தார்.

௨௦௦4ம் ஆண்டின் ௨6ம் திகதி காலையில் நிகழ்ந்த சுனாமிப் பேரலை அனர்த்தத்தால் மட்டிக்களியில் வசித்துவந்த கு. வைஸ்ணவி பலியாகி யிருந்தார். அப்போது அவர் க.பொ.த உயர்தரப் பிரிவில் கல்வி கற்றுக் கொண்டிருந்தார்.

அவரது பிரிவின் பின் அவர் பெயரை நினைவு கூறும் பதாகையொன்றை மெதடிஸ் பெண்கள் கல்லூரி உருவாக்கி ஒவ்வொரு வருடமும் தவறாது அந் நாளில் மறைந்த வைஸ்ணவியையும் ஏனைய சாவடைந்த் அனைத்து உலக மாந்தரையும் நினைவுறும் நிகழ்வு தவறாமல் அப் பாடசாலையில் நிகழ்த்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.




**வெளிநாட்டு. . .**

வெளிநாட்டிற்கு அனுப்புவதாகவும், அரச வேலைகளைப் பெற்றுத் தருவதாகவும் கூறி பல லட்சம் ரூபாய்களைப் பெற்றுக் கொண்ட ஒருவர் திருமலையிலிருந்து தலைமறைவாகியுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

திருமலை மின்சார சபையின் பிரதம எந்திரி காரியாலயத்தின் நிருமாணப் பிரிவில் பிரதம எழுதுவினைஞராகக் கடமையாற்றிய மேற்படி நபர் சுமார் 80 லட்சம் ரூபாப் பணத்துடன் தலைமறைவானதாக தெரியவந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு பிடிவிறாந்தும் பிறப்பிக்கப் பட்டுள்ளதாக நம்பத் தகுந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இந் நபர் கடைசியாக அலுவல கத்திற்கு ஒக்டோபர் மாதம் 18ம் திகதியே சமூகமளித்துள்ளதாகவும் அதன் பின்னர் அலுவலகத்திற்குச் சமூகமளிக்கவில்லை என்றும் தெரிய வருகின்றது. இவர் தொடர்பான விபரங்களைத் தொடர்ந்தும் திரட்டிவரும் திருமலைக் காவல் துறையினர் குறித்த நரைக் கைதுசெய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு ள்ளனர்.

அவ்வலுவலகத்தில் வேலை செய்யும் சிலரும் இவரிடம் காசைக் கொடுத்து வசமாக மாட்டிக் கொண்டு ள்ளதாக தெரியவருகின்றது.

அவரது பக்க விடயங்களை அறிந்துகொள்வதற்காக அவரது வீட்டுக்குத் தகவல் திரட்டச் சென்ற எமது செய்தியாளர்களுக்கு பதிலளிக்கக் கூடிய நிலையில் எவரும் அங்கிருக்கவில்லை.

மோசடி செய்பவர்களின் தகவல்களை வெளிக்கொணர மலைமுரசு ஓர் தளமாக இருப்பதாகக் கருதும் திருமலை வாழ் மக்கள் தற்போது பல மோசடிக்காரர்களின் விபரங்களை எமக்குத் தெரியப்படுத்தத் தொடங்கி யுள்ளனர்.

## திருக்கடலூர்


மோட்டார் சைக்கிளே மோதித் தள்ளியுள்ளது. தலையில் ஏற்பட்ட காயத்தினால் , உடனடியாகவே மயக்கமுற்ற சிறுவன்ன அங்கிருந் தவர்கள் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். சிறுவனை மோதிய மோட்டார் சைக்கிள் முன்னால் சென்று கொண்ட மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது.

தெருவலையமைப்பு நவீனப் படுத்தப்பட்டுள்ள இவ் வேளையில் கண்ணை மூடிக்கொண்டு வேகமாக இளைஞர்கள் உந்துருளியில் பயணிப்பதால் பெரும் விபத்துக்கள் நிகழ்வதாக அங்கிருந்தவர்கள் தெரிவித்தனர்

## ஆழிப் பேரலை நினைவில் முதலமைச்சர்

கடந்த 26 ம் திகதி ஆழிப்பேரலை நினைவுதினத்தை ஒட்டி கிண்ணியா பிரதேச செயலகம் ஒழுங்கு செய்த நிகழ்வு ஒன்று அங்குள்ள சிறுவர் பூங்காவில் உள்ள ஆழிப்பேரலை நினைவு இடத்தில் இடம் பெற்றது.

பிரதேச செயலாளர் எஸ்.கிருஸ்னேந்திரன் தலைமையில் இடம் பெற்ற இன் நிகழ்வில் கிழக்கு மாகாண முதல்வர் நஜீப் ஏ. மஜீத் அவர்களும் கிண்ணியா பிரதேச செயலக ஊழியர்கள் , மத தலைவர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கையை நன்றாகக் கழு வி எம்மைப் பாதுகாப்போமா குழந்தைகளே ?

"சுத்தம் சுகம் தரும், சுகாதாரம் நாட்டைக் காக்கும்" என்பது நம் முன்னோர்களின் வாக்கு.நோயில்லா மக்களைக் கொண்ட நாடே வல்லரசாகும். ஒரு நாட்டின் ஆரோக்கியமே அந்நாட்டின் வளம். அதனால்தான் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்கிறது பழமொழி. செல்வங்களில் எல்லாம் முதன்மையான செல்வம் நோயற்ற வாழ்வுதான். இத்தகைய செல்வத்தைப் பெற நாம் கவனத்தில் கொள்ள வேண்டியவை நிறைய உள்ளன. சுற்றுப்புறச் சூழலை சிறந்ததாக்கி, நம் உடலை நோய் அணுகாமல் தடுக்கும் சில வழிமுறைகளை கடைப்பிடித்தாலே ஆரோக்கியமான வாழ்வைப் பெறலாம். அதற்கான வழிமுறைகளில் மிக முக்கியமானது நம் கைகளை சுத்தப்படுத்துவது. அதாவது கை கழுவுவது. கைகளை கழுவுவதால் நோய் தீருமா என்ற எண்ணம் சிலருக்குத் தோன்றலாம். ஆம். காற்றின் மூலமும், நீரின் மூலமும், மற்ற பொருட்களைத் தொடுவதன் மூலமும் பரவும் நோய்கள் ஏராளம். இப்படிப்பட்ட நோய்கள் பரவாமல் தடுக்க கைகளை கழுவுதல் மிகவும் முக்கியமானது.எப்போது எவ்வாறு கைகழுவ வேண்டும்

- காலையில் படுக்கையிலிருந்து எழுந்தவுடன் கைகளை நன்கு சுத்தமாக கழுவ வேண்டும். பிறகு தான் பல் துலக்க வேண்டும்.
- மலம் கழித்தபின் சோப்பு போட்டு கைகளை கழுவுவது நல்லது.
- எந்த வேலை செய்தாலும், உடனே கைகழுவுதல் வேண்டும். சமைத்த பின்பு கூட பெண்கள் கைகளை கழுவுவது நல்லது.
- வாகனம் ஓட்டி வந்தபின்பும், உடனே கை கழுவுதல் நல்லது.
- குழந்தைகளுக்கு எந்த ஒரு உணவு கொடுப்பதற்கு முன்பும், அவர்களது கைகளை நன்கு சுத்தமாக கழுவிய பின்பே கொடுக்க வேண்டும். இந்த பழக்கத்தை அவர்கள் சீராக கடைப்பிடிக்கும்படி செய்ய வேண்டும்.
- கைகளை அவசர அவசரமாக 2-3 வினாடிகளில் கழுவக் கூடாது. குறைந்தது 30 வினாடியாவது கை கழுவுவதற்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.
- அதிக ரசாயனம் கலந்த சோப்புகள், கிரீம்களை பயன்படுத்தக்கூடாது.
- கைகளை நன்கு தேய்த்துக் கழுவ வேண்டும். நக இடுக்குகளில் தண்ணீர் விட்டு கழுவ வேண்டும்.

இந்த முறைகளைக் கடைப்பிடித்து வந்தாலே, நோய்கள் நெருங்காது எம்மைப் பாதுகாக்கலாம் .

குட்டிக் கதை

## பேராசையால் அழிவு



முன்னொரு காலத்தில் ஒரு பேரரசர் வாழ்ந்துவந்தார். பல தேசங்களும் அவரின் ஆட்சியின் கீழ் இருந்தது.

ஆனாலும் அவர் தன்னுடைய படைகளைத் திரட்டிக் கொண்டு ஒரு சிறிய நாட்டின் மீது படையெடுக்கச் சென்றார். பகல் முழுவதும் தன்னுடைய படைகளை வழிநடத்திக் கொண்டு சென்ற அரசரும் அவருடைய வீரர்களும் வழியில் ஒரு காட்டில் ஓய்வெடுத்தனர்.


வீரர்கள் தங்களுடைய குதிரைகள் சாப்பிடுவதற்காக கொஞ்சம் கடலைகளை அவற்றிற்கு அருகில் வைத்தனர்.

அந்தக் காட்டில் ஒரு மரத்தின் மீதிருந்து இதைப் பார்த்த குரங்கு ஒன்று, கீழே குதித்து வந்து அந்தக் கடலையை தன்னுடைய இரண்டு கைகளிலும் வாயிலும் அள்ளிக்கொண்டு மரத்தின் மேலே தாவிச் சென்று அதைத் சாப்பிடத் தொடங்கியது. அவ்வாறு சாப்பிட்டு கொண்டிருக்கையில் அதன் கையிலிருந்து ஒரு கடலை கீழே விழுந்து விட்டது.

பேராசை மிகுந்த அந்தக் குரங்கு தன்னுடைய கையிலிருந்த கடலைகளைக் கீழே போட்டுவிட்டு காணாமல் போன அந்தப் கடலையை தேடியது. அதனால் அந்த கடலையைக் கண்டுபிடிக்க முடியவில்லை. வருத்தத்துடன் மரத்தில் ஏறிய குரங்கு, - ஒரு கடலையை அடைவதற்காக என் கையிலிருந்த அனைத்துக் கடலையையும் நான் கீழே வீசி விட்டேனே! என்று மிகவும் கவலையுடன் தனக்குள் கூறிக்கொண்டது.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த அரசர், சிறிய அளவைப் பெறுவதற்காக பெரிய அளவு கடலைகளைத் தவறவிட்ட இந்த முட்டாள் குரங்கைப் போல நான் இருக்கக் கூடாது.

சிறிய நாட்டைப் பிடிப்பதற்காகச் செல்வதை விட்டுவிட்டு, தற்போதுள்ள பரந்த ராஜ்ஜியத்தை வைத்து நான் மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்று தனக்குள்ளாகக் கூறிக்கொண்டார். அவரின் இந்த முடிவை அடுத்து அவரும், அவருடைய வீரர்களும் தங்களுடைய நாட்டிற்குத் திரும்பினர்.




## நீங்கள் அதிக உடல் பருமனானவரா! உங்கள் எடையைக் குறைக்க சில டிப்ஸ்



சாப்பாட்டை ஒரேடியாக வெறுத்து பட்டினி கிடக்கக் கூடாது. மாறாக கொழுப்பைக் குறைக்க உணவின் அளவைக் குறைக்க வேண்டும்.

நன்கு வியர்க்கும் வரை உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

கூல்ரிங்ஸ், கோப்பி, டீ போன்றவற்றை அடிக்கடி குடிப்பதைத் தவிர்த்து விட்டு இளநீர், பழச்சாறு பருகும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

எண்ணெய்யில் பொரித்த அல்லது வறுத்த உணவுகளைத் தவிர்த்தல் நல்லது.

சாப்பாட்டை வாய்நிறைய அமுக்கிக் கொண்டு சாப்பிடக் கூடாது. நன்றாக மென்று ஆறுதலாக சாப்பிட வேண்டும். பால் அருந்துவதை தவிர்க்க வேண்டும். ஆனால் ஆடை நீக்கிய பால் மற்றும் கொழுப்பு நீக்கிய சூப் என்பவற்றைப் பருகலாம்.

சாப்பிட்டு ஆகக்குறைந்தது இரண்டு மணி நேரத்தின் பின்னரே படுக்கைக்குச் செல்ல வேண்டும்.

## பெண்களின் சிரிப்பு அழகுதான் !!!!!

சீறும் பாம்பை நம்பு சிரிக்கும் பெண்ணை நம்பாதே இது பிரபலமான பழமொழி. இதன் அர்த்தங்கள் ஆயிரம் இருந்தாலும் பெண்களின் சிரிப்பிற்கு மயங்காத ஆட்களே இல்லை எனலாம்.

சிரிப்பு மனிதனுக்கு அழகு. அதிலும் பெண்களின் சிரிப்புக்கு ஈர்ப்பு அதிகம். அதனால்தான் என்னவோ பெண்களையும் சிரிப்பையும் இணைத்து ஏராளமான கவிதைகள் கவிஞர்களால் இயற்றப்பட்டுள்ளன.



சின்ன சந்தோசம் தரும் விடயமாக இருந்தாலும் பெண்கள் நீண்ட நேரம் சிரித்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் ஏன் அப்படி இடைவிடாமல் சிரிக்கிறார்கள் என்று ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. ஆய்வாளர்கள் என்ன கூறுகிறார்கள் தெரியுமா? கலிபோர்னியாவில் உள்ள ஸ்டேன்போடு பல்கலைக்கழகம் இந்த ஆய்வை மேற்கொண்டது. 10 ஆண்களையும் 10 பெண்களையும் தேர்வு செய்து கார்ட்டூன் படங்களைக் கொடுத்து ஆய்வு செய்யப்பட்டது. அவர்களின் மூளையில் ஏற்படும் மாற்றங்களும் கண்காணிக்கப்பட்டது. கார்ட்டூன் படத்தில் இருந்த "பஞ்ச்" வசனம் அவர்களின் சிந்தனையைத் தூண்டி சிரிப்பை வரவழைத்தது. இதில் பெண்கள் நீண்ட நேரம் சிரித்தபடி இருந்தனர்.

இதற்கு அவர்களின் மூளையில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாகும். அதாவது பெண்களின் மூளையின் கார்டெக்ஸ் பகுதி இதில் முக்கிய பங்காற்றுகிறது. அவர்களின் மூளை விரைவாக செயல்படுவதுடன் அதிக எதிர்பார்ப்பின்றி இருக்கிறது. எனவே இயல்பான நகைச்சுவைகள் கூட அவர்களுக்கு விசேடமாகத் தெரிகிறது. இதனால் எளிதில் சிரிப்பைத் துண்டி விடுகிறது. அத்துடன் "பஞ்ச்" வசனங்கள் மகிழ்ச்சியைத் தருவதாக அமைந்து விட்டால் சிரிப்பை வெளிப் படுத்துகிறார்கள்.

பொதுவாக ஆண்களின் சிரிப்பானது தன்னை முன்னிலைப் படுத்தும் வகையில் அமைகிறது. பெண்கள் சிரிப்பானது உறவை வளர்க்கும் விதமாகவும், பிறரை வேதனைச் செய்யாமல் இருக்கும் வகையிலும் அமைகிறது என்கிறது ஆய்வு. இனியாவது பாம்பை விட்டு விட்டு பெண்ணின் சிரிப்பை நம்புவோமா?

**லியோ சுதன்**

## பெண்மை

பெண்ணின் இயல்புகளைப் பெண்மை என்கிறார்கள், அது போலவே ஆணின் இயல்புகளை ஆண்மை என்கிறார்கள். அதில் மென்மை, பெண்களின் பிரதான இயல்பாகவும், வீரம் ஆணின் இயல்பாகவும் சமூகத்தில் பார்க்கப்படுகிறது. உளவியல் ரீதியாக பார்ப்பமேயானால் இது சமூகத்தால் திணிக்கப பட்டுவிடுகிறது என்று கூறலாம். எப்படியெனில் ஒரு குழந்தை பிறந்ததும் அது தன் குடும்பத்தில், அல்லது சூழலில் எப்படி வளர்கிறது என்பதைப் பொறுத்து மென்மைத் தன்மையோ அல்லது வன்மைத்தன்மையோ அதற்குள் புகுந்து கொள்கிறது. இது இயற்கை எனினும் பெண் இந்த இயற்கையைப் பிற்காலத்தில் தன் அறிவுத் திறனுக்கும் அனுபவங்களுக்கும் ஏற்ப வெல்லவேண்டிய கடப்பாடு உடையவளாகிறாள். பெண்மையை மென்மையாகவே இலக்கியங்களில் படைக்கப் பட்டிருப்பதால் அதையே எம் சமூகம் பெண்ணிடம் எதிர்பார்க்கின்றது.



அதே வேளை, அதைப் பயன்படுத்தியே அவர்களைப் பாலியல் ரீதியான சுரண்டல்களுக்கும் மன அழுத்தங்களுக்கும் தள்ளிவிடுகிறது. ஆண்கள் பாலியல் ரீதியாக பெண்களிடம் சில்மிஷம் செய்வதற்கு பெண்கள் அணியும் ஆபாசத்தை தூண்டும் ஆடைகளை பிரதானமான காரணமாக குறிப்பிடுகிறார்கள்.

அதுவும் உண்மைதான்! ஆனால் பார்க்கும் பார்வை எம்முடையதல்லவா ? எம்முடைய பார்வை கண்ணியமிக்கதாக இருந்தால் பாலியல் எண்ணம் எம் மனதை தீண்டாது.

பெண்மையில் மென்மை போன்றே தாய்மையும் உள்ளது என்பதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். அண்மையில் இந்திய தலைநகரில் நடந்ததென்னவோ ஒட்டுமொத்த பெண் இனத்திற்கும் எதிரான வன்முறை தான். அங்கு நீதிக்காகப் போராடும் மக்களுள் ஆண்களும் அடக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## The Sunday Times:

**வானைத் தொடும் அளவு நட்டமடைகின்றது மிகின் — மேலும் பல மில்லியன்களைத் தேடுகின்றது**

மிகின் லங்காவைத் தொடர்ந்தியக்குவதற்காக மேலும் 597 மில்லியன் ரூபாய்களை வழங்க அமைச்சரவை அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது.

இத்தொகை அவ்விமானக் கம்பனியின் இரு விமானங்களை திருத்துவதற்கான செலவாகவுள்ளது. 2008ம் ஆண்டு தொடக்கம் தற்போதுவரை மிகின் லங்கா விமான நிறுவனம் அடைந்துள்ள நட்டம் அலுவலகப் புத்தகங்களின் படி ரூபா 8 பில்லியன்களையும் தாண்டியுள்ள நிலையில் அந் நிறுவனம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மேலும் 895 மில்லியன் ரூபாய்களை செலுத்த வேண்டியுமுள்ளது.

மேற்கூறப்பட்ட திருத்தச் செலவுகளுள் உரு திருத்தச் செலவான 2.7 அமெரிக்க மில்லியன்கள் ஊடாக் திருத்தப்படும் விமானம் திருத்தியவுடனேயே அதனைக் குத்தகைக்குப் பெற்றுக் கொண்டவருக்குக் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. விமானத்துறை அமைச்சின் தகவல்களின் படி இப்படித்தான் அவ்விமானம் மீளக் கொடுக்கப்பட வேண்டும் என குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது வெளியாகியுள்ளது.

எனினும் இதற்கென காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்களிருப்பது தெரிய வந்துள்ளது. மற்றைய விமானமானத்தினது பறப்பு எந்திரம் திருத்த முடியாத அளவிற்குப் பாதிப்புள்ளாகியுள்ளது. இதனை மாற்றும் செலவு அமெரிக்க டொலர்களில் 1.8 மில்லியன்களாகும்.

**ஹம்பாந்தோட்டையில் சிங்கப்பூரின் பொலித்தீன் கம்பனி**

இலங்கை துறைமுக அதிகாரசபை பலமில்லியன் ரூபா பெறுமதியான பொலித்தீன் கம்பனியொன்றை சிங்கப்பூருடன் இணைந்து உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது.

இதற்கான அனுமதியை சனாதிபதியின் ஆலாசனைக்கு அமைய அமைச்சரவை வழங்கியுள்ளது. இக்கூட்டு முயற்சிக்காக இலங்கையில் ஹம்பன பெற்றோ கெமிக்கலஸ் நிறுவனம் என்னும் கம்பனி தாபிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வருடாந்த நீதிபதிகளின் சம்மேளனக் கூட்டத்திற்கான நிதி நிறுத்தப்பட்டது**

வருடாந்த நீதிபதிகளின் சம்மேளனத்திற்கான நிதியுதவி திடீரென நிறுத்தப்பட்டதால் அக்கூட்டத்திற்கான செலவை அங்கத்தவர்கள் பொறுப்பேற்க வேண்டியேற்பட்டுள்ளது. இதற்கமைய பங்பற்றும் நீதிபதிகள் தலா 4000 ரூபாவைச் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளனர். இதற்கமைய சேர்க்கப்பட்டுள்ள பணத்திலிருந்து இக் கூட்டத்தை ஐந்து நட்சத்திர ஓட்டலில் நடாத்தும் வசதியிருப்பதாக அச்சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

**ஆப்கான் மற்றும் ஈராக்கில் கடத்தப்பட்ட மனிதர்கள் தொழில் புரிவதை உறுதிப்படுத்திய குடிவரவுத் திணைக்களம்.**

நேட்டோ மற்றும் அமெரிக்கத் த[illegible]களுள்ள ஆப்கானிலும் ஈராக்கிலும் இலங்கை[illegible]ளவாகக் கடத்தப்பட்டு வேலை செய்வ[illegible] வரவுத் திணைக்களத்தின் புலனாய்வுப் பிரவு உறுதி செய்துள்ளது.

இலங்கையர்கள் ஐக்கி அரபு இராச்சியத்த[illegible]ற்கு தொழிலுக்குச் செல்வதற்காகவே விசா அனுமதின[illegible] பெற்றுச் சென்று பின்னர் அங்கிருந்து மேற்கூறப்பட்ட தளங்களுக்கு களவாக இடம் மாற்றப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

2004ம் ஆண்டிலிருந்து நடந்துவரும் இந்த பல மில்லுயன் ரூபா மோசடித் திட்டத்தின் பின்னுள்ள சூத்திரதாரியைக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளதாக அத்திணைக்கள புலனாய்வுப் பிரவு தெரிவித்துள்ளது.

நூற்றுக்கணக்கானவர்களை இவ்வாறு கடத்தி வேலைக்கனுப்பியுள்ளமை தெரியவந்துள்ளது. கள்ள விசாவின் ஊடாக அனுப்பப்படும் மக்கள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் விமானம் மாறுவதற்காக காத்திருக்கும் வகையில் பயண ஏற்பாடு செய்யப்பட்டருக்கும். அவ்வாறு விமானம் மாறும் இடத்தில் வைத்து அவர்களை அமெரிக்க மற்றும் நேட்டோ தளங்களுக்கு எடுத்துச் செல்லும் விதமாக திட்டங்கள் இதுவரை காலமும் தயாரிக்கப்பட்டிருந்திருக்கின்றது.

இவ்வாறான கடத்தலுக்கு தலைக்கு ரூபா 250,000 ஆயிரத்திலிருந்து ரூபா 300,000 ஆயிரம் வரை செலுத்தப்பட்டுள்ளது. இக்கடத்தலில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சூத்திரதாரிகளாயிருக்கும் வாய்ப்புள்ளதும் தெரியவந்துள்ளது.

## The Sunday observer:

**பாராளுமன்ற தெரிவுக் குழு மேன்முறையீட்டு நீதிமன்றின் முன் ஆஜராகத் தேவையில்லை.**

கடந்த வாரம் பாராளுமன்ற தெரிவுக் குழுவினருக்கு வழங்கப்பட்டுள்ள அறிவித்தலுக்கேற்ப அத்தேர்வுக் குழுவினர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு செல்லவேண்டிய அவசியமில்லை எனவும் இவ்விடயம் தொடர்பாக சபாநாயகர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு தெரிவிக்கக் கூடிய வலுவைக் கொண்டிருப்பதாகவும் பிரதிச் சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார். பாராளுமன்ற முன்னுரிமைச்சட்ட பிரிவு - 9 இன் படி பாராளுமன்றமோ அல்லது அதன் குழுக்களோ மூன்றாம் தரப்பொன்றின் செல்வாக்குக்குட்படவோ அல்லது தடைகளை எதிர்கொள்ளவோ தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார். உலகில் பாராளுமன்ற சனநாயத்தைக் கொண்டுள்ள நாடுகள் எல்லாவற்றாலும் இவ்விடயம் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆசியாவின் மிக நீண்ட சனநாயக வரலாற்றைக் கொண்ட இலங்கை 1931ம் ஆண்டு முதல் தடையற்ற சனநாயக உரிமையினால் பாதுகாக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். சிராணி பண்டாரநாயக்காவுக்கெதிரான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் முடிவுகள் தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்பட்டுள்ள மனுவொன்றின் விசாரணைக்கு எதிர்வரும் 3ந் திகதி சபாநாயகரையும் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அங்கத்தவர்களையும் மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜராகுமாறும் அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது.

**மனிதக் கடத்தலைத் தடுப்பதற்கு குடியகழ்வுச் சட்டங்களில் மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளது.**

1948ம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கை குடிவரவு குடியகழ்வுச் சட்டத்தினை அடுத்த வருடம் ஏப்ரல் மாதமளவில் புத்தாக்கம் செய்யும் தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளது. இப்புத்தாக்கத்தினூடாக வெளிநாட்டுக்கான மனித கடத்தல்களைத் தடுப்பதற்கான விடயங்களைக் கொண்டிருப்பதுடன் அப்பழைய சட்டம் 90% மான மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்டு குடிவரவு குடியகழ்வு திணைக்களத்தினால் சட்ட வல்லுனர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

**மாலைதீவை வென்றது இலங்கை**

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடம் நவம்பர் மாதம் வரை மாலைதீவுக்கான உல்லாசப்பயணிகளின் வருகை 3.7வீத வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ள அதே வேளை இலங்கை சுமார் 20,000 பயணிகளை அதிகமாகப் பெற்றுள்ளது. தற்போது வரை மால்டீவ்சின் உல்லாசப்பயணிகளின் தொகை 866,310 ஆகக் காணப்பட இலங்கைக்கான உல்லாசப் பயணிகளின் தொகை 883,353 பேராகக் காணப்படுகின்றது.

**அரசிற்கு அபகீர்த்தி ஏற்படுத்த முயற்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தந்திரோபாயம்**

இலங்கையில் நடைபெறும் அனைத்திற்கும் சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பொறுப்பாக்குவதன் ஊடாகவே இந்த ஆட்சியைக் கவிழ்க்க முடியும் என ஐக்கிய தே[illegible] கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் [illegible] பெரேரா தெரிவித்தார். ஐக்கிய தேசியக் [illegible]ன் இணைந்த ஊடக வர்த்தக சங்க [illegible]ம்மேளன[illegible]த்தின் 45 ஆவது வருடாந்த பொதுக்கூட்ட[illegible]த்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சிறிகோத்தாவில் நடந்த இக்கூட்டத்தில் சனாதிபதியை இந்த நாட்டில் நடைபெறும் எல்லாவற்றுக்கும் பொறுப்பாக ஆக்கினால் அந்த ஆட்சியை கவிழ்க்க முடியும் என கூறினார். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையோ அல்லது பிரதி தலைமையோ மட்டும் இச்செயற்பாட்டைச் செய்வதால் பயனில்லை என்றும் கட்சி அங்கத்தவர்கள் அனைவரும் இச்செயற்பாட்டில் ஈடுபடவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

**"பிக்பொக்கற்" மற்றும் ஐ.ஆர்.சி களை மடக்கும் திட்டம் :**

சாதாரண உடைகளில் பெண் காவல்துறையினரும் அவர்களுக்கு உதவியான ஆண் காவல்துறையினரும் பெருமளவு மக்கள் கூடும் இடங்களில் வலம் வருவதாக காவல்துறைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வாறு வலம்வருபவர்கள் பிக்பொக்கற் கொள்ளைக்காரர்களையும், ஐ.ஆர்.சி களையும் மடக்குவதற்காகவும் குற்ற நடவடிக்கைகளைத் தடுப்பதற்காகவும் செயற்படுவர் எனவும் தெரியவருகின்றது. டிசம்பர் 19ம் திகதியிலிருந்து [illegible] இத்திட்டம் [illegible] நிறைவுறும் என தெரியவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The Sunday Leader

**நிலக்கரி கொள்வனவில் கரியாகியது 1.28 பில்லியன்**

தரங்குறைந்த நிலக்கரி விற்பனையால் இலங்கை அரசுக்கு ஏற்பட்ட 1.28 பில்லியன் ரூபா நட்டத்தை ஈடுசெய்வதற்காக தூரியன் அயன் ஸ்டீல் கம்பனி லிமிடெட் இனால் நிலக்கரியுடன் அனுப்பப்பட்ட கப்பலை தடுத்துவைக்குமாறு சக்தி வள அமைச்சு கட்டளை இட்டுள்ளது. மேலதிகமாக இந்த கம்பனிக்கான கடன் கடிதங்களை (letter of credit) நிறுத்தும் உத்தரவை அமைச்சு வழங்கியுள்ளது.

ஒரு மாதத்திற்கு முன் நிலவிய பாதகமான காலநிலையால் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட 85,000 மெட்ரிக் தொன் உயர்தர நிர்ணயம் கொண்ட நிலக்கரியை இலங்கையில் இறக்கமுடியாது போகவே அதனை தூரியன் அயன் ஸ்டீல் கம்பனிக்கு இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் வழங்கியிருந்தது. இதற்குப் பதிலாக காலநிலை சீரடைய அதே தரம் கொண்ட நிலக்கரியை இலங்கைக்குத் தர வேண்டும் என பேசப்பட்டிருந்தது. எனினும் இதனை இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனம் அக்கம்பனியிடமிருந்து உறுதிமொழியாகப் பெற்றுக்கொள்ளவில்லை.

**இரவுக்கார் பந்தயம் — கொழும்பு மாநகர சபை இழந்தது 2.9 மில்லியன்**

இரவுக்கார்ப் பந்தயத்திற்காக விற்கப்பட்ட அனுமதிச்சீட்டுக்களுக்கு மாநகரசபை வரியை அறவிட வேண்டாம் என்று மேல்மாகாண சபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க உத்தரவிட்டிருந்தார். இவ் உத்தரவால் கொழும்பு மாநகரசபை 2.9 மில்லியன் ரூபாய்களை இழந்துள்ளது.

இதைத்தொடர்ந்து மேல் மாகாணசபை முதலமைச்சரை இவ்விடயம் சார்பாக தொடர்பு கொண்டபோது அவர் நகரத்தினதும் நாட்டினதும் நலன் கருதியே இந்நடவடிக்கையை மேற்கொண்டதாகவும் அதற்குத் தனக்கு உரிமையுள்ளதாகவும் தெரிவித்தார்.

**வெலிக்கடைக்கு றிப்பீட்டர் துப்பாக்கிகள்**

அண்மையில் வெலிக்கடையில் நிகழ்ந்த கலவரங்களைத் தொடர்ந்து தொழினுட்பம் குறைந்த துப்பாக்கிகளை சிறைச்சாலைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பெறுபேறாக T 56, CZ 58, ஆகிய ரகங்களைச் சேர்ந்த 750 இயந்திரத் துப்பாக்கிகளுக்குப் பதிலாக றிப்பீட்டர் துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளது.

பல ரவைகளை குறுகிய காலப்பொழுதில் பொழிந்து தள்ளும் இயந்திரத் துப்பாக்கிகளாலேயே பெருமளவு மரணங்கள் சிறைச்சாலைக்குள் நிகழ்ந்ததாக புனர்வாழ்வு சிறைச்சாலைகள் மறுசீர் அமைப்பின் செயலாளர் G.S.விதானகே தெரிவித்துள்ளார். இவ்வகைத்துப்பாக்கிகளை நீக்கிவிட்டு றிப்பீட்டர் துப்பாக்கிகளை வழங்குவதன் ஊடாக இதனைத் தவிர்க்க முடியும் எனவும் தெரிவித்தார்.

றிப்பீட்டர் துப்பாக்கி ஒன்றின் ரவைக்கூட்டில் வெறும் 6 ரவைகளே இடப்பட முடியும் எனினும் றிப்பீட்டர் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதற்கான பயிற்சியை சிறைச்சாலை காவலர்கள் பெற்றுக்கொள்ளவில்லை. அத்துடன் தற்போது வழங்கப்பட்டுள்ள றிப்பீட்டர் துப்பாக்கிகள் 1980ம் ஆண்டு காலப்பகுதியில் காவல்துறை மற்றும் வன அலுவலகர்களால் பயன்படுத்தப்பட்டவை எனவும் தரம் குறைந்தவை எனவும் தெரியவந்துள்ளது. இவ் றிப்பீட்டர் துப்பாக்கிளின் சுடுதூரம் 25 மீற்றர் ஆகவிருப்பதால் கழகக்காரர்களை நெருங்கி நின்று சிறைச்சாலை அலுவலர் ஒருவர் தாக்கவேண்டிய சூழல் உள்ளதால் அது தமக்கு பெரும் உயிர் அச்சுறுத்தல் என சிறைச்சாலை அலுவலகர்கள் தெரிவித்துள்ளனர்.


**பாராளுமன்ற தெரிவுக்குழு மேன்முறைமீட்டு நீதிமன்ற அறிவித்தல் தொடர்பாக கலந்தாலோசித்தே தீர்மானம் எடுக்கும்.**

பிரதம நீதியரசரின் மீதான குற்றச்சாட்டுக்களுக்கென உருவாக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவை மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு முன் வருமாறு தெரிவித்த அறிவித்தல் தொடர்பான முடிவை எடுப்பதற்கான கலந்தாலோசனைகள் நிகழ்த்தப்படும் என அக்குழு தெரிவித்துள்ளது. அக்குழுவின் தலைவருக்கு இதுவரை அறிவித்தல் கிடைக்கவில்லை. இவ்வாறிருக்க ஐக்கிய தேசியக்கட்சியால் இக்குழுவிற்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கோன் அமரதுங்க, நாங்கள் ஏற்கனவே இத்தெரிவுக்குழுவில் இருந்து விலகியிருந்ததால் நீதிமன்றத்தின் முன் செல்லத் தேவையில்லை என்று தெரிவித்தார்.



# முரசின் விளையாட்டு செய்திகள்





சச்சின் ரெண்டுல்கர் –

காந்தியை உதைத்து வீழ்த்திய வெள்ளையரின் வழித்தோன்றல்களை, தனக்காக எழுந்து நின்று மரியாதை செய்யவைத்த வீரன் - தென்னாசியாவின் கௌரவம் - கர்வம்

இன்று சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டின் துக்க நாள். அவசரமான ஒருநாள் கிரிக்கட்டைக் கூட மாசு படுத்தாமல் உண்மையாக விளையாடிய ஒரு மாவீரன் அந்த விளையாட்டில் இருந்து ஓய்வு பெறுகிறேன் என்று அறிவித்த கரிநாள் – இன்று, சச்சின் சர்வதேச ஒருநாள் கிரிக்கட்டில் இருந்து ஓய்வு பெறுகிறேன் என்று அறிவித்த நாள்.

1989ம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிராக தனது சர்வதேசக் கிரிக்கட்டைத் தொடங்கிய ரெண்டுல்கர் 23 வருடங்களாக விளையாடி இன்றுவரை 463 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 18,426 ஓட்டங்களை எடுத்து, அதில் 49 செஞ்சுரிகளையும் ( 100 ஓட்டங்கள்) எடுத்துள்ளார். இவை எல்லாமே உலக சாதனைகள்.

உலகில் அதிக ஒரு நாள் ஓட்டங்களையும், (18,426 ஓட்டங்கள் ), அதிக ஒருநாள் செஞ்சுரிகளையும், (49) அதிக ரெஸ்ற் ஓட்டங்களையும் ( 15,645 ஓட்டங்கள் ) அதிக ரெஸ்ற் செஞ்சுரிகளையும் (51) எடுத்தவர் என்ற பெருமைக்குச் சொந்தக் காரர் இவர். இந்த சாதனைகள் ஒன்றும் நடித்தோ, ஸ்ரைல் பண்ணியோ பெற்றது அல்ல. உலகின் தலைசிறந்த பந்துவீச்சாளர்களையும், மிகச் சாதுர்யமான கிரிக்கட் கப்ரன்களின் வியூகங்களையும் எதிர்த்து நின்று வென்ற உண்மையான மகா சாதனை. இனி ஒருவராலும் முறியடிக்க முடியாத சாதனைகள் இவைகள்.

ஒவ்வொரு கோடை காலத்திலும் ஆஸ்திரேலியாவுக்கு வேறு நாட்டு கிரிக்கெட் அணிகள் சுற்றுப்பயணம் செய்து பல கிரிக்கெட் போட்டிகளில் ஆஸ்திரேலிய அணியுடன் மோதுவது வழமை. அவற்றில் ஒரு போட்டி கட்டாயமாக S.C.G என்று அழைக்கப்படும் சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும். அப் போட்டிகளில் உலகின் தலைசிறந்த பல கிரிக்கெட் வீரர்கள் பங்குபற்றியிருக் கிறார்கள்.. பல தலைசிறந்த கப்ரன்கள் பங்கு பற்றியிருக்கின்றார்கள் ஆனால் அவர்கள் ஒருவருக்கும் கிடைக்காத ஒரு மரியாதை ஒரே ஒருவருக்கு மட்டும்தான் கிடைத்துள்ளது. அது STANDING OVATION என்று சொல்லப் படுகின்ற மரியாதை. அதே போன்றதான மரியாதை உலகெங்கும் அவருக்குக் கொடுக்கப் படுவதைப் பார்க்கலாம்.

அந்த வீரர் விளையாடுவதற்கு மைதானத்துக்குள் நுழையும் போது அங்கு பார்வையாளர்களாக வீற்றிருக்கும் சிறியோர் முதல் வயோதானோர் வரை ஆண் பெண் பாகுபாடின்றி எழுந்து நின்று கைதட்டி அவரை முகமலர வரவேற்பதாகும். அந்தக் கணம் மிக உணர்வுபூர்வமானது.

அந்தக் கணத்தில் ஒவ்வொரு முறையும் ஒரு எண்ணம் தோன்றுவதுண்டு அது என்னவென்றால் ஒரு காலத்தில் வெள்ளையர்களால் தமக்குச் சமமாக ரயிலில் ஏறிவிட்டார் என்று உதைத்து வீழ்த்தப் பட்ட காந்தியின் இந்தியாவில் பிறந்த சச்சின் கத்தியின்றி இரத்தமின்றி தனது அபாரமான, நேர்மையான கிரிக்கெட் விளையாட்டின் மூலம் அதே வெள்ளையர்களின் வழித்தோன்றல்களை, அதே காந்தியின் நாட்டவரை எழுந்து நின்று கைதட்டி வர்வேற்க வைத்துள்ளாரே... இந்தப் புரட்சியை இனி எவராலும் செய்யமுடியாது என்பதாகும்.

உலகின் தலை சிறந்த கிரிக்கட் வீரரான ஆஸ்திரெலியாவின் டொன்.பிரட்மன் தனது முதுமைக் காலத்தில் ஒருமுறை ரீ.வி.யில் இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் எதிரான விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்த போது சிறுவயது சச்சினின் விளையாட்டைப் பார்த்து அதிசயித்து தனது மனைவியை கூவி அழைத்து இதோ இந்தப் பையன் என்னைப் போலவே கிரிக்கட் விளையாடுகிறான். என்று அதிசயப் பட்டிருந்தார். அந்தச் செய்தி பிரட்மனின் மனைவி மூலமாக வெளியே கசிந்து பல ஊடகங்கள் சேர்.பிரட்மனை சென்று அதைப் பற்றிப் பேட்டி எடுத்தன .

இது சாதாரண விடயமல்ல. ஆஸ்திரேலியா பல கிரிக்கெட் வல்லுனர்களை உருவாக்கியுள்ளது, ஆனால் எவரையும் பிரட்மன் இப்படிப் புகழ்ந்து பேசியதில்லை. இது வஷிஷ்டர் வாக்குப் போன்றது.

ஆஸ்திரேலியாவின் சிட்னி கிரிக்கெட் மைதானத்தின் வாழ்நாள் அங்கத்தவர் என்ற கௌரவப் பட்டத்தை நியூ சவுத்வேல்ஸ் பிரீமியர் சச்சினுக்குக் கொடுத்துக் கௌரவப் படுத்தியுள்ளார்! இந்தக் கௌரவம் வேறெந்த வீரருக்கும் இதுவரை கொடுக்கப் படவில்லை. அதேபோல ஆஸ்திரேலிய அரசும் தனது மிகப் பெரிய கௌரவ விருது ஒன்றை சச்சினுக்குக் கொடுத்துக் கௌரவப் படுத்தியுள்ளது. எல்லோரும்தானே கிரிக்கெட் விளையாடுகிறார்கள்- அதிலும் சமீபத்தில் அறிமுகமான வீரர்கள் அதிரடியாக அடித்து சரமாரியாக ஓட்டங்கள் எடுக்கிறார்கள்- அப்படி இருக்கும்போது ஏன் சச்சின் இளைப்பாறாமல் ஆடுகிறார் என்று நீண்டநாட்களாக கேள்வி கேட்போர் இல்லாமலில்லை. அவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ளவேண்டும்,

அதாவது கிரிக்கெட் 100 வருடத்துக்கு மேலாக விளையாடப் படும் ஒரு விளையாட்டு. இதில் வெவ்வேறான பந்துவீச்சுக்கு எதிராக பந்தை எப்படி அடிக்கவேண்டும் என்றும் , கால்களை எப்படி உபயோகப் படுத்தவேண்டும் என்றும் Coaching Manual எனப்படும் பயிற்சிப் புத்தகத்தில் எழுதப் பட்டுள்ளது.

ஒரு போட்டியில் பலவிதமான பந்துவீச்சுக்களை பல விதமான திறமைகொண்ட பந்துவீச்சாளர்கள் வீசுவார்கள். ஆஸ்திரேலியா தென் ஆபிரிக்கா போன்றவற்றின் வேகப் பந்து வீச்சாளர்கள் 150 கி. மீ எனும் கணக்கில் பந்து வீசுவார்கள். துடுப்பாட்ட வீரரை பயமுறுத்தி நிலை தடுமாறச் செய்து அவுட்டாக்குவதற்காக அவரின் தலையை நோக்கி 150 கி.மி வேகத்தில் பந்து வீசுவார்கள். இதற்குத் தாக்குப் பிடிப்பது இலகுவானதல்ல. குறிப்பாக ஆசிய நாட்டுக் கலாச்சாரத்தில் வளர்ந்த ஒருவர் வேகப் பந்தை சமாளிப்பதென்பது மிகக் கடினம். ஆனால் இங்குதான் சச்சின் மற்றவர்களில் இருந்து வித்தியாசப் படுகிறார்.

அவர் இதுவரை எந்த வேகப் பந்துக்கும் பயந்ததில்லை, முக்கியமாக 150 கி.மீ இல் வீசப்படும் பந்தை அவர் எதிர் கொள்ளும் போதும், அல்லது ஷேன் வோர்ன் முரளி போன்ற உலக சாதனை சுழல் பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ளும் போதும் அவரது கால்களின் பயன்பாடும் அவர் தெரிவுசெய்யும் துடுப்பாட்டமும் அடிக்கும் முறையும் அச்சொட்டாக கிரிக்கற் பயிற்சிப் புத்தகத்தில் சொல்லப்பட்டதைப் போலவே இருக்கும். பார்க்கும் போது அவ்வளவு அழகாக இருக்கும்.

இது கிரிக்கட்டின் எதிர்காலத்துக்கும் ஆரோக்கியத்துக்கும் மிக முக்கியமானது காரணம் சச்சின் ரெண்டுல்கரைப் பார்த்து கிரிக்கட் பயிலும் எதிர்கால சந்ததிமூலம்தான் மாசற்ற கிரிக்கெட்டை காப்பாற்ற முடியும். தனியவே ஓட்டங்கள் மட்டும் எடுத்தால் போதும் என்று விளையாடுவோர் உண்மையான கிரிக்கெட் வீரர்கள் அல்லர். இவர்களால் கவரப்படும் இளம் சந்ததியால் உண்மையான கிரிக்கெட்டுக்கு அழிவுதான் ஏற்படும்.

இதை பாமரத் தமிழில் கூறுவதாயின் கேக் ஒன்றை அதை வெட்டுவதற்கென்றே செய்யப்பட்ட கத்தியாலும் வெட்டலாம் அதே நேரத்தில் கோடாலியாலும் வெட்டலாம், சச்சின் கிரிக்கெட் விளையாடும் போது கேக்கை அதற்கான கத்தியால் வெட்டுவதைப் போன்றும் மற்றவர்கள் விளையாடும் போது கோடரியால் வெட்டுவதைப் போன்றும் இருக்கும் அவ்வளவுதான்.

சர்வதேச ஒருநாள் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றாலும் ரெஸ்ற் போட்டிகளில் சச்சின் தொடர்ந்து விளையாடுவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அவர் தொடர்ந்து ரெஸ்ற் போட்டிகளில் விளையாடவேண்டும். இதுதான் உலகெங்குமுள்ள உண்மையான கிறிக்கட் ரசிகர்களின் , பேரவா. ஏனென்றால் சச்சின் ரெண்டுல்கரின் காலத்துக்குப் பின் இனியொரு சச்சின் இந்த நூற்றாண்டில் பிறக்கப் போவதில்லை, உண்மையான கிரிக்கெட்டை அழகாக விளையாட ஒருவரும் இருக்கப் போவதில்லை.... எனவே பாரம்பரியமான உண்மையான கிரிக்கெட் மறைந்து, ரி20 என்ற மாயமான் கிரிக்கெட்டை அழிக்க தொடங்கிவிடும்.

(நன்றி - முகப்புத்தகம் - கிரிக்கற் ... கிறுக்கல்கள் )

## வலைப் பயிற்சிக்கான நிதி ஒதுக்கீடு

திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் வீர்களின் ஆற்றல்களை மேலும் வளப்படுத்துவற்காக 2 பயிற்சி வலை ஆடுதளங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்காகவும் ஆடுகளம் ஒன்றை அமைப்பதற்காகவும். ஸ்ரீலங்கா கிரிக்கெட் 500,000 ரூபாய்களை திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கத்திற்கு வழங்கி உள்ளது.

இதற்கான காசோலை கடந்த செவ்வாய்க்கிழமை 18.12.2012 வடக்கு கிழக்கு மாகாண கிரிக்கெட் அபிவிருத்தி குழுவின் தலைவர் எஸ்.மதிவாணனால் திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் பசீர் அமீரிடம் வழங்கி வைக்கப்பட்டது.

இவ் விடயமாக பசீர் அமீருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது சங்கத்தின் செயலாளர் மருத்துவர் சையொலிபவனால் கூட்டப்படும் செயற்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப் பட்டு முடிவு செய்யப்படும் எனத் தெரிவித்தார். (கதிரவன்)

## வருடாந்த விளையாட்டு விழா

ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் அதன் இணைக் கழகமான யங் ஒலிம்பிக்ஸ் ஆகியன இணைந்து நடாத்தும் வருடாந்த விளையாட்டு நிகழ்வு கடந்த 08ம், 09ம் திகதிகளில் நடைபெற்று முடிந்தது.

மொத்தக் கழக உறுப்பினர்களும் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அக் குழுக்களிடையே 08ம் திகதி துடுப்பு மட்டைப் போட்டியும் 09ம் திகதி உதைபந்தாட்டப் போட்டியும் நடை பெற்றன. சிரேட்ட மற்றும் மூத்த வீரர்கள் இளம் வீரர்களுக்கு இணையாக விளையாடியமை சிறப்பம்சமாய் இருந்தது.

ஒலிம்பிக்ஸ் கழக செயலாளர் கூறுகையில் தமது கழகம் மட்டுமே தொடர்ந்து பல வருடங்களாக விளையாட்டு விழா ஒன்றை நடாத்திவருவதாகவும் விளையாட்டு விழாவைத் தொடர்ந்து 23ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஒன்றுகூடல் விருந்துபசார நிகழ்வும் சிறப்புற நடைபெற்றதாகத் தெரிவித்தார். (அடிவாசன்)


"படர்க்கை"

திருமலையிலிருந்த வெளியாகவுள்ள கலை இலக்கிய சஞ்சிகை

உங்களின் காத்திரமான ஆக்கங்களும் வெளி வர களம் சமைக்கவுள்ளது

ஆசிரியர், படர்க்கை,
இல. 159A கடல் முக வீதி
திருமலை
தொடர்பு : 077 005 0036

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு

போட்டோ கொப்பி

20% விலைக்கழிவு

உமா பிரிண்டர்ஸ்
460/30,
மின்சார நிலைய வீதி,
(St.Joseph's Tech எதிரே)
தொடர்பு: 0756605643


மலைமுரசு பத்திரிகையின் அலுவலக வினியோகத்தர்கள் – திருமலை நகர லியோ கழகத்தினர்

The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் திருக்கோணமலை வித்தியாலயம் வீதியில் 58ம் இலக்கத்திலுள்ள எஸ். எஸ். டிஜிட்டல்ஸ் இல் 30 12. 2012ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.